உ

சிவமயம்.

லவணபுரம் என்னும்

உப்பூர்

வெயிலுகந்தவிநாயகர்

# புராணவசனம்.

இஃது

தேவகோட்டை, ஜமீந்தார்

ஸ்ரீமான்

அள. அரு. ராம.

## அருணாசலஞ்செட்டியாரவர்கள்

அநுமதியால்

தஞ்சாவூர், பிரம்மஸ்ரீ

சதாவதானம்,

## சுப்பிரமணிய ஐயரவர்கள்

புராணச் செய்யுளுக்கிணை

மொழிபெயர்த்து

தேவகோட்டை

எஸ்டேட் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1918.

# படல அட்டவணை.


| நம்பர் | படலம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | நைமிசப்படலம். | ... | 1 |
| 2 | விநாயகர் திருவவதாரப்படலம். | ... | 3 |
| 3 | சூரியன் உபாசித்தபடலம். | ... | 7 |
| 4 | வெயிலுகந்த விநாயகப்படலம். | ... | 10 |
| 5 | திருமணப்படலம். | ... | 12 |
| 6 | கயமுகாசுரன் வதைப்படலம். | ... | 25 |
| 7 | இராமன் பூசித்தபடலம். | ... | 33 |
| 8 | வீமராசன் புத்திரப்பேறு பெற்றபடலம் | ... | 40 |
| 9 | தீர்த்த விசேடப்படலம். | ... | 45 |
| 10 | தலவிசேடப்படலம். | ... | 46 |
| 11 | முனிவர் பூசனைப்படலம். | ... | 47 |

ஸ்ரீ

ஹர:

சிவமயம்.

லவணபுரம் என்னும்

# உப்பூர்ப் புராண வசனம்.

வெயிலுகந்தவிநாயகர் காப்பு.

கலிவிருத்தம்.

மயிலுகந்த வரன்வரு முன்பரன்
கயிலுகந்த கனிபெற் றுளமகிழ்ந்
தெயிலுகந்த வெழில்கொள் ளுப்பூரில்வாழ்
வெயிலுகந்த விநாயகன் காப்பதாம்.

## நைமிசப் படலம்.

நவமணிகளால் பிரகாசிக்கின்ற அநேக சிகரங்களையுடையதும் ஊழிக் காலந்தோறும் உயர்வதும் கற்பகத்தருக்கள் கனிந்த கனிகளைத் தரப்பெற்றதும் பற்பல வளமிகுந்ததும் கருடர் சித்தர் தேவர் சாரணர் இயக்கர் முதலியோர் வேதங்களினால் துதிக்கப்பட்டதுமான கைலாசகிரியின் தென்கிழக்கில் பிரமதேவனால் சக்கரமாக்கிவிடப்பட்ட தருப்பைப்புல் நின்ற இடமாகியதும் சிவபிரானுடைய சடாமகுடத்தினின்றும் இறங்கி இமாசலத்தில் தங்கிப் பின்பு சாகருடைய என்பிற் படிந்து அவர்கள் நற்கதி பெறும்படி இப்பூவுலகத்தில் சஞ்சரிக்கின்ற கங்காநதிக்கரையின்கணுள்ளதும் ஆல் அகில் மூங்கில் கடப்பு புன்னை அரசு வெண்ணாவல் குருந்து திருவாத்தி வில்வம் வேப்பு பலா கொன்றை வன்னி பாதிரி

களா மா பனை மந்தாரம் முதலிய மரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலவிருட்சமென்று காட்டுவதற்கு உதாரணமாய் விளங்கப் பெற்றதும் பசுவின்கன்றுகளும் புலிக்குட்டிகளும் ஓர்துறையில் நீருண்ணவும் சிங்கக்குட்டிகள் பெண்யானைகளுடைய முலைப்பாலுண்ணவும் தவஞ்செய்கின்ற முனிவர்களாற்செய்யப்பட்ட யாகப் புகை மேகவாகனமாய்த் தேவலோகத்திற்சென்று தேவேந்திரனை அவிர்ப்பாகத்தைக் கிரகித்துக்கொள்ளும்படிக் கொண்டுவரத்தக்க சிறப்பமைந்ததும் ஆகிய நைமிசாரணியத்தைச் சிவற்சர் சம்பு மௌற்கலர் ஆபத்தம்பர் சவுநகர் முதலிய முனிவர்களெல்லோரும் அடைந்து வியாசமுனிவரது மாணுக்கராகிய சூதமகாமுனிவரைத் தரிசித்து வேதங்களால் தொகுத்துரைக்கப்பட்ட புராணங்கள் அனைத்தையும் விவரணமாய் எடுத்துரைக்கும் முனிவர்சிங்கமே சிவாஞ்ஞையால் உம்மைத் தரிசிக்கப் பெற்றோம் நற்கதியும் பெற்றோம் எங்களுக்கு ஒரு குறையுமில்லையென்று துதித்து வணங்கி நின்று விண்ணப்பம் செய்கின்றார்.

அனைத்திற்கும் முதற்பொருளாய் நின்மல மூர்த்தியாய்ப் பிரணவ சுரூபியாய் விளங்குகின்ற விநாயகக் கடவுளின் மான்மியத்தையும் அக்கடவுள் எழுந்தருளியிருக்கின்ற தலங்களுக்குள் ஓர் உயர்ந்த தலத்தின் மான்மியத்தையும் நாங்கள் உணரும்படி உரைத்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர்.

வியாசமுனிவரின் மாணுக்கராகிய சூதமகாமுனிவர் பிரணவ வடிவாய் விளங்குகின்ற விநாயகமூர்த்தியின் திருவடிகளை ஒரு முகூர்த்தகாலம் உளமுருகித் தியானித்து மயிற்குச்செறிய வேத வியாசராகிய தமதாசிரியரின் திருவடிகளைத் தியானித்துத் திக்கு நோக்கி வணங்கிச் சௌநகாதி முனிவரைப்பார்த்து இருசெவிக் கமுதாய்க் குற்றந்தீரக் கேட்பீராகவென்று விநாயக மான்மியத்தைச் சொல்லச் சிந்தித்துக்கொண்டு, சொல்வாராயினர்.

வியாசமுனிவரால் வேதங்களினின்று தொகுத்துரைக்கப்பட்ட புராணங்கள் பதினெட்டும் உப புராணங்கள் பதினெட்டும் உள்ளன. அவ் வுபபுராணங்கள் பதினெட்டினுள் பார்க்கவ்ம் என்

றது ஒன்று. அது பிரமதேவர் பிருகுமுனிவருக்கு உபதேசிக்க அவரால் சொல்லப்பட்டது (பார்க்கவம்) அப்புராணத்தில் விநாயக மூர்த்தியின் மான்மியமும் அவர் எழுந்தருளியிருக்கின்ற தலங்களின் மான்மியமும் விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் சிறந்த புண்ணிய க்ஷேத்திரமாகிய (லவணபுரம்) என்னும் உப்பூர்த்தல மான்மியத்தையும் அதில் வீற்றிருக்கின்ற (ஆதபேச்சா விநாயகர்) என்னும் வெயிலுகந்த விநாயகமூர்த்தியின் மான்மியங்களையும் சேதுபுராணத்திலுள்ள மான்மியங்களையும் சௌநகாதி முனிவர்களே கேளுங்கள் என்று சொல்லத்தொடங்கின.

நைமிசப் படலம்
முற்றிற்று.

---

# விநாயகர் திருவவதாரப் படலம்.

ஐம்புலாதிகளை நிக்கிரகித்து அரிய தவங்களைச்செய்து சிறப்பெய்திய சவுனகாதி முனிவர்களே, விநாயகமூர்த்தியினுடைய புராணக்கேள்வி மகத்துவத்தால் வேதவியாசமுனிவரும் சோமகாந்தராஜனும் பெரும்பேற்றினை அடைந்திருக்கின்றார்கள் அத்தன்மைத்தாகிய மேலான புராணத்தில் பிருகுமகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்ற முறைப்படி விநாயகமூர்த்தியின் திருவவதார சரித்திரத்தைச் சொல்லுகின்றேன்.

பூர்வம் ஒரு கற்பத்தில் பராபரப் பொருளாய் எல்லாமாய் எங்கும் நிறைந்த பூரணமாயிருக்கின்ற பிரணவ வடிவாகிய பரமாத்துமாவானவர் நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்பு எண்பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதங்களாயுள்ள சீவான்மாக்களெல்லாம் கன்மங்களுக்கிடான சரீரங்களை எடுத்து ஆதிதெய்விகம் ஆதிபௌதிகம் ஆதியாத்மிகம் என்கின்ற தாபத்திரயாக்கினிகளால் தகிக்கப்படுந் துயரங்களை நீக்கிச் சிறிது இளைப்பாறும்படி

யாகத் தம்மிடத்தில் ஒடுக்கிவைத்துக்கொண்டிருந்து முன்போல வே அவைகட்குத் தநு கரண புவன போகங்களைத் தந்து கன்மங் களைப் புசிப்பித்து அக்கன்மவொப்பில் மல சம்பந்தமாய் இரா நின்ற பாசபந்தங்களைப்போக்கி முத்தியிற் சேர்க்குநிமித்தம் மீள வும் சிருட்டி திதி சங்காரம் என்கின்ற முத்தொழில்களை நடப் பிப்பதற்குத் திருவுளங்கொண்டு வக்கிரதுண்டவிநாயகர் என் னும் பெயருடன் திருவவதாரஞ் செய்து இராசதம் தாமதம் சாத் துவிகம் என்கின்ற தமது முக்குணங்களினின்று பிரமன் விண்டு உருத்திரன் என்னும் மூவர்கள் உதித்து வருமாறு அவர்கட்கு உருவையும் அறிவையும் உண்டாக்கியருள, அவ்வாறு அவர்கள் உற்பத்தியாகிப் பின்பு தங்களைப் படைத்தருளிய பரப்பிரம சுரூபம் இன்னதென்று அறியவேண்டுமென்று வெறும்வெளிகள் எங்குந்தேடிக் காணாமல் தேவவருடத்தில் ஆயிரவருடம் தவஞ் செய்தார்கள் அத்தவத்திற்குப் பரப்பிரமசுரூபமாகிய வக்கிர துண்ட விநாயகமூர்த்தி கிருபைகூர்ந்து கோடி சூரியப் பிரகாசத் தினும் அதிக சோதியை வீசுகின்ற திருவுருவமும் நவரத்தின கிரீ டம் குண்டலம் புசகவசம் சரப்பணி பதக்கம் பாதச்சிலம்பு முத லாகிய ஆபரணங்களும் துதிக்கையும் நீண்டு வளர்ந்திருக்கின்ற தந்தங்களும் மதத்தைப் பொழிகின்ற யானை முகமும் கத்தி கேட கம் வேல் வில் என்னும் ஆயுதங்களைத் தரித்திருக்கின்ற நான்கு கரங்களும் தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளும் சந்திர வாரத்தினையும் கொன்றைமாலையினையும் தரித்திருக்கின்ற அழகிய மார்பும் சோம சூரியாக்கினியென்னும் முக்கண்களும் விளங்குந் திருமேனியோடு எதிரில் பிரத்தியக்ஷமாயினர்.

உடன் அம்மூவரும் அச்சமும் அன்பும் உண்டாய்ச் சரீரம் தடுமாற நெக்குவிட்டு நெஞ்சமுருகிக் கரங்களைச் சிரமேல் குவித்த வண்ணம் விரைந்தெழுந்து தங்கள் இச்சையிற்றோன்றியபடியெல் லாம் ஆடிப்பாடி அனந்த முறை வலம்வந்து பூமியில் வீழ்ந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து ஆனந்த பரவசங்கொண்டு தோத்தி ரஞ் செய்தார்கள்.

இவ்வாறு தோத்திரங்கள் செய்து சகல புவனுதார கர்த்தரே

தேவரீருடைய பாதாரவிந்தங்களைத் தரிசித்தவர்களெல்லாம் சகல துன்பங்களும் நீங்கிப் பேரின்ப சுகத்தை யடையத்தக்கவர்களாவார்கள். அடியேங்களும் தேவரீரைச் சரணாக அடைந்தோம். யாங்கள் கிருதார்த்தர்களாகும்படிக் காத்துரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவர்கள் மீது விநாயகமூர்த்தி கிருபை வைத்து அன்பர்களே நீங்கள் செய்த தோத்திரங்களுக்கு இரங்கினோம் நீங்கள் கருதிய வரங்களைக் கேட்பீராகவென்று திருவாய் மலர்ந்தருளலும் பரப்பிரம சுரூபியே தேவரீருடைய திவ்விய சரணாரவிந்தங்களில் அடியேங்களுக்குத் திடமான பத்தியுண்டாகும்படி வரங்கொடுத்து யாங்கள் நடந்துகொள்ளவேண்டிய பணியினையும் அருள் செய்தால் அதை அடியேங்கள் நன்முடிகட்குப் பொன்முடியாகவணிந்து நடாத்திவாக் கடவோமென்றார்கள். அதற்கு விநாயகக்கடவுள் சந்தோஷித்து நமது முக்குணங்களினின்று முண்டானவர்களே நம்மிடத்து உங்களுக்கு அளவற்ற பத்திகள் பெருகத்தக்கதான வரத்தைத் தந்தோம் நீங்கள் நடந்துகொள்ள வேண்டிய பணியும் சொல்லுகின்றோம்.

அதாவது இராசதவடிவிற்றோன்றிய பிரமனே நீ இராசதத் தொழிலிலிருந்து சகல சீவராசிகளையுஞ்சிருட்டிசெய்யக்கடவை தாமதவடிவிற்றோன்றிய விண்டுவே நீ சாத்மீகத் தொழிலிலிருந்து யாவையும் இரக்ஷனை செய்யக்கடவை, சாத்மீக வடிவிற்றோன்றிய உருத்திரனே நீ தாமதத் தொழிலிலிருந்து யாவையுஞ் சங்காரஞ் செயக்கடவை என்றருளிச்செய்து வேதாகம புராணகலைகளைக் கொண்டு யாவையுஞ் சிருட்டிசெய்யத்தக்க சத்தியைப்பிரமனுக்கும் யோகத்தினால் வேண்டிய வடிவங்களைக் கொண்டு யாவையும் இரட்சிக்கத்தக்க சத்தியை விண்டுவுக்கும் ஏகாக்ஷர சடாக்ஷர மந்திரங்களைக்கொண்டு எங்குந் தானாயிருந்து யாவையுஞ் சங்காரஞ் செய்யத்தக்க சத்தியை உருத்திரருக்குங் கொடுத்தருளினார்.

இன்னும் விநாயகக் கடவுள் பற்பல அவதாரங்கள் செய்திருக்கின்றனர். அவைகளுள் முன்னொரு காலத்தில் சிந்தாமணிவிநாயகர் திருவவதாரங்கொண்டு கபிலமுனிவருடைய சிந்தாமணியைக் கவர்ந்த கணாசுரனை வென்று அதை மீட்டு அவர்க்களித்ததும்

# உப்பூர்ப் புராண வசனம்.

கஜானநவிநாயகர் திருவவதாரங்கொண்டு பிரமதேவனுடைய கொட்டாவியினின்றுமுற்பவித்த சிந்தூரனைக் கொன்று தேவர்களைக் காத்ததும் விக்கினராஜவிநாயகர் திருவவதாரங்கொண்டு காலரூபனென்ற வக்கிரனை யழித்து உலகத்தைக் காத்ததும் மயூரேசவிநாயகர் திருவவதாரங்கொண்டு வேத சாஸ்திரங்களைத் தேவர்களிடத்தினின்று கவர்ந்த காலாசுரனைச் சங்கரித்து மீட்டு அவ்வேத சாத்திரங்களை அத்தேவர்கட்குத் தந்ததும் பிந்திய மயூரேசவிநாயகர் திருவவதாரங்கொண்டு தேவர்களைச் சிறையில் வைத்த சிந்தாசுரனைக் கொன்று மற்ற அவுணர்கள் செய்யும் மாயையினை யொழித்ததும் பாலசந்திரவிநாயகர் திருவவதாரங்கொண்டு அநலாசுரனை விழுங்கித் தேவர்கள் பூசை கொண்டதும் தூமகேதுவிநாயகர் திருவவதாரங்கொண்டு மாதவராஜனுக்கும் அவன்மனைவி சுமுதைக்கும் தீங்குசெய்த தூமராஜனைக் கொன்று அவ்விருவரைப் பாதுகாத்தும் கணேசவிநாயகர் திருவவதாரங்கொண்டு திரிபுராதிகளை வெல்லும்படியாகச் சிவபிரானுக்கு அநுக்கிரகித்ததும் கணபதிவிநாயகர் திருவவதாரங்கொண்டு தேவர்களை வருத்திய கஜமுகாசுரனைக் கொன்று விண்டுவின் தாபந் தீர்த்ததும் மகோற்கடவிநாயகர் திருவவதாரங்கொண்டு நராந்தகனையும் தேவாந்தகனையும் நாசஞ்செய்து காசிராஜனுக்கு முத்தியளித்ததும் துண்டிவிநாயகர் திருவவதாரங்கொண்டு துராசதனை வென்று திவோதாதன் மனதைத் திரித்து விசுவநாதமூர்த்திக்குக் காசிநகரைக் கொடுத்ததும் வல்லபைகணேசர் திருவவதாரங்கொண்டு மரீசிரிஷி புத்திரியாகிய வல்லபையையும் விண்டு புத்திரிகள் பன்னிருவரையும் திருமணஞ் செய்து அவ்விண்டுவுக்கு யோகஞானதத்துவமென்கின்ற கணேசகீதையை உபதேசித்ததும் ஆகிய அவதாரங்களும் உள்ளன.

## விநாயகர் திருவவதாரப் படலம்
## முற்றிற்று.

## சூரியன் உபாசித்த படலம்.

முன்னொருகாலத்தில் பிரமபுத்திரனாகிய தக்கனென்பவன் தன் புத்திரியாகிய தாக்ஷாயணியைச் சிவபெருமானுக்குத் திருமணம் புரிவித்து எத்தேவர்க்கும் மகாதேவனாகிய சிவபெருமானை மருகனென்னும் முறையால் தன்னிலுந் தாழ்ந்தவனென்றெண்ணி யிகழ்ந்துவிட்டு மற்றைய விண்டு முதலிய இழிந்த தேவர்களையே தலைமையாக்கொண்டு ஒரு யாகஞ்செய்யத்தொடங்கி யாகபதியாகிய சிவபெருமானுக்கு அவிற்பாகங் கொடாது மறுத்து மற்றத் தேவர்களுக்கெல்லாம் அவிற்பாகங்கொடுக்க அத்தேவர்களும் சிவபிரானைமதியாது வாங்கியுண்டனர். அதனைச்சிவபிரானுணர்ந்து திருவுளஞ்சினந்து அவ்வேள்வியைச் சிதைக்க வீரபத்திரக்கடவுளை யுண்டாக்கிவிட அவர்வந்து அவ்வேள்விச்சாலையிற் புகுந்து எல்லாவற்றையும் அழித்து அவிற்பாகம் பெற்றுண்ட ஒவ்வொரு தேவருக்கும் ஒவ்வொருதண்டனை செய்தனர். அத்தேவருள் ஒருவனாகிய சூரியதேவனை வீரபத்திரக்கடவுள் கொடிற்றில் உதைத்தனர், அவன் வாயிலுள்ள பற்கள் உதிர்ந்தன. அதனால் மிகுந்த துன்பமும் அவமதிப்புமடைந்து வருந்தி அச்சூரியதேவன் கைலையங்கிரியையடைந்து சிவபெருமானைத்தரிசித்து வணங்கி நமஸ்கரித்துநின்று துதித்துப் பிரார்த்திக்கின்றனன்.

அதாவது எத்தேவர்க்கும் மேலாகிய பரம்பொருளே நீயே எத்தேவர்களுக்கும் மகாதேவனென எல்லாவேதமுடிகளுஞ் சொல்லி இருக்கின்றதை யான் உணர்ந்திருந்தும் அறிவில்லாமல் மகாபாவியாகிய கொடியதக்கனது போதனையால் விண்டுமுதலிய தேவர்களுடன் கூடி அவனது வேள்வியின் அவியையேற்றுண்டனன் அக்குற்றத்திற்கு வீரபத்திரக்கடவுளால் பல்லுகள் உடைபட்டனன் அது நிற்க அந்தஅவியை உண்ட அபராதத்தைப் போக்கிக்கொள்ளாவிடில் எனக்குமேற்கதி எங்ஙனம் கிட்டும் ஆதலால் அவ்வபராதத்திற்குப் பிராயச்சித்தம் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென வேண்டிக்கொள்ளப் பராத்பரம் பொருளாய் விளங்குகின்ற

சிவபெருமான் சூரிய தேவனது வேண்டுகோளுக்கிரங்கி அவன் தமது முக்கண்களில் வலக்கண்ணாகிய தன்மையையும் திருவுளங் கொண்டு அவனிடத்துக் கிருபைசுரந்து அவ்வபராதத்திற்குக் கழு வாய் சொல்லுகின்றனர்.

உலகத்திலுள்ள சீவகோடிகளுக்கிழைத்த அபராதத்தாலா கும் பாவத்தைச் சாமானிய தேவர்கள் தீர்ப்பார்கள் அத்தேவர் களுக்கிழைத்த அபராதபாவத்தை நாம் தீர்ப்போம் நமக்கிழைத்த அபராதபாவத்தைப் பராபரப்பொருளாய்ப் பிரணவ ரூபியாகிய விநாயக மூர்த்தியே தீர்த்தலன்றி நம்மால் இயலாது. ஆதலால் அவ்விநாயகமூர்த்தியை உபாசித்துத் தீர்த்துக்கொள்வாய் என் றருள, அதுகேட்ட சூரியதேவன் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து பணிந் தெழுந்து நின்று சிவபெருமானை நோக்கி அங்ஙனம் யான் எத் தலத்திலிருந்து விநாயகமூர்த்தியை உபாசித்துச் சித்திபெறுவது அதையும் அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று வேண்டச் சிவபெ ருமான் அதனையுந் திருவாய் மலர்ந்தருள்வதாயினர்.

செந்தமிழ் வளங்களும் நானில வளங்களும் நிறைந்து செழி த்திருக்கின்ற பாண்டிநாட்டின்கண் கீழ்கடலாகிய மகோததிக்கரை யில் சேதுமூலமாகிய தேவிபுரத்துக்கு ஒருயோஜனை வடக்கிலும் காளிபுரத்துக்கு இரண்டுயோஜனை கிழக்கிலும் திருப்புனவாயிலு க்கு ஒருயோஜனை தெற்கிலுமுள்ளது ஒருவனம், அது வன்னி மந்தாரவனம் அவ்வனம் மகாபுண்ணிய பூமியாயும் தவஞ்செய்வதற் குப் பரிசுத்தமானதாயும் நின்மலமாயும் செய்யுந் தவங்களை விரை வில் சித்திபெறச் செய்வதாயும் உள்ளது. அவ்வனத்தை நீயடைந் திருந்து விநாயகமூர்த்தியை உபாசிப்பையாயில் அவர் பிரத்தியட்ச மாய் உன் குற்றமுழுதும் போக்கி உனக்கு நற்கதியும் அருளுவ ரென்று திருவாய் மலர்ந்தனர்.

அவ்வாஞ்ஞையைச் சூரியதேவன் சிரமேற்கொண்டு தென் றிசையை நோக்கிச்சென்று பாண்டிநாட்டையடைந்து அந்நான் கெல்லைக்குட்பட்ட அவ்வனத்தைச் சார்ந்தனன். சார்தலும் அச் சூரியதேவன் தன்மனம் நிர்மலமாய்ப் பரிசுத்தமாய்க் களங்கமற்

திருப்பக்கண்டு இத்தலமே தவசித்திகரமென்று அவ்விடத்தில் மகோததிக்கரையில் தங்கி இருந்துகொண்டு விநாயகமூர்த்தியை உபாசிக்கத்தொடங்கி அவ்விடத்தில் ஒரு தீர்த்தம் உண்டாக்கி முதலில் சங்கற்ப பூர்வமாய் மகோததியில் நீராடிப் பின்பு தன்னு லாக்கப்பட்ட அத்தீர்த்தத்திலும் சங்கற்பத்துடன் மூழ்கிப் பட்டாடையுடுத்து விபூதிருத்திராட்சம் தரித்து நித்திய கருமம் முடித்துக்கொண்டு அத்தீர்த்தத்திற்கு வடகீழ்க்கரையும் கடற்குமேல் கரையுமாகிய அவ்விடத்தில் ஒரு பன்னசாலையமைத்துக்கொண்டு ஏகாக்கிரசித்தமாய் மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி என்னும் ஐந்தாதாரங்களின் வழியாய்ச்சென்று அதற்குமேல் புருவமத்தியில் ஆயிரவிதழ்த்தாமரைமலர்வடிவாகிய ஆக்கியாசக்கரத்தில் பரப்பிரமமாய்ப் பிரணவாகாரமாயுள்ள விநாயக மூர்த்தியைத் தியாநிக்க அம்மூர்த்தி நீண்டுவளர்ந்திருக்கின்ற துதிக்கையும் தந்தங்களும் மதத்தைப்பொழிகின்ற யானைமுகமும் பாசம் அங்குசம் தாமரைமலர் மோதகம் தரித்த நான்கு கரங்களும் தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளும் உள்ள தேசோமயமான திருமேனியோடு பிரத்தியட்சமாயினர். சூரியதேவன் அங்ஙனம் காட்சிதந்தருளிய விநாயக மூர்த்தியைச் சாஷ்டாங்கமாய்ப் பணிந்தெழுந்து பன்முறைதுதித்து ஓ பராபரப்பொருளாகிய விநாயகப்பெருமானே தக்கன் என்பான் சிவபெருமானை நிந்தித்து விலக்கி மற்றையதேவர்களை வைத்துக்கொண்டு ஓர் யாகஞ்செய்ய அதில் யானும் அறிவில்லாமல் உணவின் ஆசையால் சேர்ந்திருந்த குற்றத்திற்காக வீரபத்திரரால் பல்லுடைபட்டும் சிவநிந்தாபராதம் நீங்கிற்றில்லை ஆதலால் சிவபெருமான் ஆஞ்ஞைப்படி உன்னைச் சரணுயடைந்தேன் அச் சிவநிந்தாபராத பாவத்தைத் தீர்த்தருள்கவென்று பிரார்த்தித்துக்கொண்டனன்.

விநாயக மூர்த்தி கிருபைகூர்ந்து சூரியதேவனை நோக்கி இத்தலத்தில் நம்மைவிதிப்படிப்பூசித்து ஆராதிப்பையாகவென்றருளினர். சூரியதேவன் அங்குத் தன்முன் காட்சிதந்தருளிய விநாயக மூர்த்தியைத் தைலம் பஞ்சாமிர்தம் பால் தயிர் தேன் சந்தன முதலிய பதார்த்தங்களினுலும் வேதமந்திரங்களினல் செபிக்கப்பட்ட கும்பசலத்தினுலும் அபிஷேகித்து ஆடையாபரணங்களினல்

அலங்கரித்துச் சந்தனமணிந்து வன்னி மந்தாரம் அறுகு முதலிய பத்திரங்களால் விநாயகமூர்த்தியை அவரது ஆயிரநாமங்களை யுச்சரித்துத் தனது ஆயிரங் கதிர்க்கரங்களாலும் அர்ச்சனைசெய்து தூப தீபாராதனைசெய்து அறுசுவைப் போனகங்களையும் மோதகம் தேங்காய் முப்பழம் விளாம்பழம் நாவற்பழம் முதலியவைகளையும் நிவேதித்துச் சோடசோபசாரங்களுஞ்செய்து கற்பூர நீராஞ்சனஞ் செய்து பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து பன்முறை துதித்துப் பிரார்த்தித்து நின்றனன்.

மகா கிருபாசமுத்திரமாகிய விநாயக மூர்த்தியானவர் சூரிய பூசைக்குத் திருவுளமுவந்து நமது வலக்கண் மணியாகிய தின கரனே சிவநிந்தாபராத மகாபாவியாகிய தக்கனுடன் சேர்ந்த உனது மகா பாதகமானது சிவபிரானாலும் தீர்க்கமுடியாததுதான் ஆயினும் அதை இத்தலத்தில் எம்மை நீ இந்தவிதிப்படி பத்தி யுடன் பூசித்ததினால் உன்னை விட்டொழித்துவிட்டோம் இனி நீ மேற்கதியும் பெறக்கடவை யென்றநுகிரகித்தனர்.

சூரியன் உபாசித்தபடலம்
முற்றிற்று.

---

## வெயிலுகந்த விநாயகப் படலம்.

இவ்வண்ணம் விநாயகமூர்த்தியருளாலும் சூரியதேவன் பேரா நந்தபரிதனாய்ப் பலமுறை வீழ்ந்து வீழ்ந்து நமஸ்கரித்து சுவாமீ நீர் இத்தலத்தில் எனக்குத் தரிசனங்கொடுத்தருளியபடியே அடி யேன்மீது கருணைகூர்ந்து எக்காலத்தும் வீற்றிருந்தருளவேண்டு மென்றும் எனது பாபவிமோசனஞ் செய்தருளியபடியால் பாப விமோசன புரமென்றும் வன்னியும் மந்தாரமும் தல விருக்ஷங் களாய் இருத்தலால் வன்னிமந்தார வனமென்றும் இத்தலம் என் னால் காணப்பட்டதால் சூரியபுரியென்றும் மகோததியாகிய லவண

சமூத்திரக்கரையிலுள்ளதால் லவணபுரம் (உப்பூர்) என்றும் எனது தபசு சித்தியடைந்த இடமாதலால் தவசித்திகரமென்றும் இத்தலம் உலகத்தில் பேர்பெற்று விளங்கவேண்டும் என்றும், இதுவுமன்றி உமது சந்நிதியிலுள்ள மகோ,ததிதீர்த்தமானது விநாயக தீர்த்த மென்றும் உம்மை அபிஷேகிக்க உண்டாகியதீர்த்தம் சூரியபுஷ் கரணி யென்றும் பேர்பெற்று விளங்கவேண்டுமென்றும் பிரார்த் தித்துக்கொண்டனன் அவன் வேண்டியபடியே விளங்குக என்று விநாயகப்பெருமான் அநுக்கிரகித்தனர். பின்னும் சூரியதேவனான வன் வேண்டுகின்றனன் அதாவது என்னையாண்டருளிய விநாயக மூர்த்தியே யான் உமது திருமேனியை என் கிரணங்களாகிய ஆயிரங்கரங்களாலும் இன்று பரிசித்து அருச்சித்தபடியே எக்கா லத்தும் உமது திருமேனியை எனதுகிரணங்கள் பரிசித்துத் அருச் சித்துக்கொண்டிருக்கும்படிக்குத் திருவுளங்கொண்டருளவேண்டு மென்று வேண்டிக்கொண்டனன்.

விநாயக மூர்த்தியானவர் அதற்கும் கிருபைகூர்ந்து சூரிய தேவனே நினது அர்ச்சனையை என்றும் யாம் மகிழ்ந்து அங்கீ கரித்துக்கொள்கின்றோம், அதற்குச் சான்றாகவே என்றும் நமது திருமேனியில் உன்னுடைய கிரணங்கள் தீண்டிக்கொண்டிருக்கும் வண்ணம் வீற்றிருக்கின்றனம் என்று திருவாய் மலர்ந்தருளினர். ஆதலால் அந்த விநாயகமூர்த்திக்கு (ஆதபேச்சர விநாயகர்) வெயி லுகந்த விநாயகர் என்று பேர் வழங்குகின்றது என்று சூத புரா ணிகர் சவுனகாதி முனிவர்களை நோக்கி மொழிந்தனர்.

வெயிலுகந்த விநாயகப் படலம்

முற்றிற்று.

# திருமணப் படலம்.

ஓ சவுனகாது முனிவர்களே பிரணவவடிவாகிய விநாயக மூர்த்தியானவர் லவணபுரத்தில் எழுந்தருளி வீற்றிருக்கின்ற வைபவத்தைச் சொன்னோம். இனி அவ்விநாயக மூர்த்தியின் திருமண வைபவத்தைச் சொல்கின்றோம் சிரத்தையோடு கேளுங்கள் என்று சூத பௌராணிகர் சொல்லத் தொடங்கினர்.

பின்பு ஒரு காரணமாக விநாயகமூர்த்தியானவர் கைலாசகிரியிலே சிவபெருமானுக்குப் புத்திரராய் அவதரித்திருந்தார் அக்காலத்தில் மகா தவசிரேஷ்டராகிய நாரதமுனிவர் அந்நின்மல சுரூபியாகிய கணேசமூர்த்தியின் பாதபதுமங்களைப் போற்றுதற்குக் கைலாசபர்வதத்தை நோக்கி மிக்க ஆவலோடு சென்று அப்பர்வதத்தின்கண் பொன்மயமாகி விளங்குஞ் சபா மண்டபத்தின் முகப்பில் இரத்தினமயமாயோங்கிய சிங்காதனத்தின்மீது தேவகணங்கள் புடைசூழ்ந்து போற்றுதல் செய்ய வீற்றிருக்கின்ற விநாயகமூர்த்தியைக் கண்டு அவரது திருவடிக்கமலங்களில் சாஷ்டாங்கமாய்ப் பணிந்து களிப்புடன் துதித்து வீணையில் கட்டுண்டிருக்கின்ற நரம்புகளைத் தடவி இசையாகிய புதியவமுதத்தை நிறைத்துக் கர்த்தன் புகழைப்பாடி அவர் திருவருளைப்பெற்று இதனை விண்ணப்பஞ் செய்வதாயினர்

ஓ சர்வபரிபூரண கருணாகர மூர்த்தியே! தேவரீரிடத்தில் அடியேன் தெரிவித்துக்கொள்ளவேண்டியது ஒன்றிருக்கின்றது அதனை விண்ணப்பஞ் செய்யச் செவி கொடுத்தருளவேண்டும். அதாவது தாமரைமலரை யாசனமாக்கொண்ட பிரமதேவர் முன்பு தமது தியானசிந்தையினின்றும் உதித்தவர்களாகிய சித்தி புத்திகள் என்னும் இரண்டு கன்னியரைத் தேவரீருக்குத் திருக்கல்யாணஞ் செய்விக்கும் எண்ணத்தையுடையவராயிருக்கின்றார்.

அன்றியும் அப்பிரமதேவரே இலக்கணமமைந்த மானிடர்களை இனிமையாகப் படைக்குங்காலத்தில் மும்மலக்குறும்புகளை

நீக்கவல்ல தேவரீருடைய திருவுருவத்தை யெண்ணியே மாட்சிமைபெற்ற மங்கையரைப் படைக்குங்காலத்தில் யாவருந் துதித்தற்குரிய அம்மாதர்கள் வடிவங்களை முற்றுங் கருதுவாராயின் சுவாமிகளின் வனப்பினுக்கேற்ற அவர்கள் பேரழகின் பெருமைகள் இவ்வளவினவென்று அடியேனு ளளவிட்டுரைக்கற்பாலவோ உள்ள விதத்தை யாவர் சொல்ல வல்லவரென்று நாரதமுனிவர் சொன்னமாத்திரத்தில் கொன்றைமாலிகையணிந்த பரமேசுவர புத்திராகிய கணேசமூர்த்தி அங்கீகாரங்கொண்டு அம்முனிவருக்கு அருள்வழங்கினார், அவ்வருளைப்பெற்ற நாரதமுனிவர் பின்னுந் திருவடிகளில் வணங்கி வந்தித்து விடைகொண்டு அம்மங்கையரிடத்திற் சென்று பலமுறை துதித்து அவர்கள் இன்புறத்தக்கதாகவும் இவ் வையகமுய்யத்தக்கதாகவும் இதனைச் சொல்வதாயினர், புண்ணிய பூமியில்முளைத்து அறமுதலிய நாற்பொருள்களையும் பூத்து யாவர்க்கும் இம்மை மறுமைப்பயனை விளைவிக்கவல்ல கொடிபோன்று விளங்கிய எனது அன்னைமீரே யான் விநாயகக் கடவுளுடைய திருவடிகளை யன்போடு பணிந்து அவரது சமூகத்தின்முன்பு உங்கள் வனப்புகளனைத்தும் எடுத்துரைத்தேன். அவைகளை அக்கடவுள் அங்கீகரித்து உம்மைத் திருக்கல்யாணஞ் செய்துகொள்ள மதித்திருக்கின்றனர், என்றுசொல்ல அவரும் அவரைக் கல்யாணஞ்செய்துகொள்ள மிக்க ஆவல்கொண்டிருந்தார்கள்.

அப்பால் அந்நாரதமுனிவர் பிரமதேவனிடத்திற்சென்று தாம் நடத்திவந்தகாரியங்களனைத்தையும் அறிவிக்க அப்பிரமன் மனக்களிப்படைந்து இனி நம்புத்திரிகளுக்கு விரைவில் விவாகத்தினைச் செய்துமுடிக்கவேண்டுமென்று தன்னுள்ளத்தில் மதித்தெழுந்தவனாய் உடனே கைலாயவரையிற்சென்று சோமன் சூரியன் அக்கினி என்கிற மூன்றுவிழிகளையுடையவராகியும் ஈசானம் தற்புருடம் அகோரம் வாமம் சத்தியோசாதம் என்கிற ஐந்துமுகங்களையுடையவராகியும் மூவர்முதல்வராகியும் வீற்றிருக்கின்ற சிவபெருமானைப்பணிந்து பலமுறைதுதித்துநின்றான். உமாபதியாகிய பரமேசுவரர் அப்பிரமதேவனைநோக்கி நீ இங்குவந்த காரணமென்னென்றுவினவியருள அதற்கப்பிரமதேவன் சொல்லுவான், எந்தையே பிரமன் விண்டு உருத்திரராகிய எங்கள் மூவரையும் ஈன்று

ஆக்கல் முதலிய முத்தொழில்களைத்தந்து ஆட்கொண்டருளிய கணேசமூர்த்திக்கு இலக்குமியுங்கண்டு நாணத்தக்க வனப்பு வாய்ந்த எனதுபுத்திரிகளிருவரை மணஞ்செய்துகொடுக்க ஆவலுற் றிருக்கின்றேன், அதற்குத் தேவரீரநுமதியைப்பெறுமாறு வந் தேனென்றான். சந்திரசேகரமூர்த்தியாகிய சிவபெருமான் செவி யுற்றுக்கிருபையோடும் உமாபரமேசுவரியினுடைய திருமுகத் தைநோக்க அவர் பிரமதேவன்முகத்தைப்பார்த்து விநாயகமூர்த் திக்குத் திருக்கல்யாணஞ்செய்வதால் யாவர்க்குநன்மையுண்டாகு மாதலின் அதனை விரைவின்முடிக்கக்கடவையென்று அருள்சுரந் தார். இவ்வாறு தாய்தந்தையரிசைதலும் பிரமதேவன்மகிழ்ந்து விடைபெற்றுவந்து கருணைபொழிகின்ற யானைமுகத்தையுடைய கணேசமூர்த்தியை யடைந்துசாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து ஓ சமானரகிதநிகில சகத்காரணகர்த்தராகிய விநாயகமூர்த்தியே அடி யேனிவ்வுலகங்களைச் சிருட்டிக்குமாறு சுவாமிகள் முன்பு இர ண்டுசத்திகளைக் கொடுத்திருக்கின்றீரன்றோ அச்சத்திகளைத்தே வரீர் திருமணஞ்செய்தருளவேண்டும் பூதபௌஷியவர்த்தமானாத் மகமாகிய காலத்திரயத்திலும் பிரதிவியாதி பஞ்சபூதாத்மகமாகிய காரணத்திரயத்திலும் உள்ளும்புறம்பும் வியாபித்து அந்தர்யாமியா கிய பரமாத்மாவாகியும் சர்வசாக்ஷியாகியுமிருக்கின்ற சுவாமிகள் எவ்வாறு நடாத்திக்காட்டுகின்றதோ அவ்வாறன்றி இப்பிரபஞ் சங்களில் வேறொன்றும் நடப்பதில்லாமையால் சுவாமிகள் அப் பெண்களைத் திருமணஞ்செய்துகாட்டாதவரையில் இப்பிரபஞ்சங் களிற் சுகங்காணமுடியாது,

அதன்றியும் ஆண்களோடு பெண்கள் மனங்கலந்து கூடினு லல்லது சுவாமிகளடியேற்குக் கற்பித்தருளிய சிருட்டித்தொழில் பிரகாசமுறாதாதலால் சுவாமிகள்தயவுசெய்தெழுந்தருளி அடி யேனை முற்றிலுமாட்கொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்தான் அதற்கு நிலம் நீர் தீ கால் வெளி சூரியன் சந்திரன் இயமானன் என்கிற அஷ்டமூர்த்திவடிவாகிய விநாயகக்கடவுளிசைந்து ஓ பிரமனே நீயுரைத்த கலியாணத்திற்கு வேண்டியமுயற்சிகளை நடா த்திக்கொண்டிரு யாம்அவ்விடத்திற்கு யாவர்களோடும் வரு கின்றோமென்று விடைகொடுத்தருளப் பின்பு அப்பிரமதேவன்

கருணைநாயகராகிய விநாயகமூர்த்தியினது கிருபாநோக்கம்பெற்றுக்கொண்டுபோய் வைகுந்தத்தையடைந்து திருமகள்கணவராகிய திருமாலைவணங்கித் தன்புத்திரிகளுடைய கல்யாணத்தையுரைத்து அவ்விடத்தினின்று நீங்கித் தனது சத்தியலோகத்தைச்சேர்ந்து தேவதூதுவரைக்கூவி அவர்களிடத்திற் சகலரிஷிகளும் சகலவேந்தர்களும் சகலதேவர்களும் அத்தேவர்கட்கரசனாகிய இந்திரனும் மற்றுமுள்ளயாவரும் தங்கள்தங்கள் குடும்பசமேதர்களாய் விரைந்துவரவேண்டுமென்று திருமணப்பத்திரிகையை வரைந்தனுப்பிப் பின்பு விசுவகர்மாவையழைப்பித்து எமதுகர்த்தராகிய கணேசமூர்த்தியினது திருக்கல்யாணமகோற்சவத்தைத் தரிசிக்கவருகின்றவிண்ணுலகினர் பூமண்டலவாசிகள் பாதலத்தினர் முதலானவர்கள் வீற்றிருப்பதற்கு யோக்கியகரமான வீடுதிகள் முதலியவைகளையும் கல்யாணமண்டபத்தையும் சாத்திரவிதிப்படிக்குத் தீவிரமாய்முடிக்கக்கடவையென்று ஆக்கியாபித்தான்.

அதற்கவ் விசுவகர்மா அதிகமகிழ்ச்சியையடைந்தவனாய் இப்பணிவிடைசெய்தற்கு யானென்னதவஞ்செய்தனனோவென்று ஆனந்தமுற்று இங்கிமிடத்தில் தமதிட்டப்படி செய்யக் கடவேனென விடைபெற்றுச்சென்று ஒரு நகரமுண்டாக்கி அதனைச்சூழப் பருத்தோங்கியிருக்கின்ற மதில்களெழுப்பி நாற்புறங்களினும் விசித்திரமுற்றுவிளங்குகின்ற கோபுரங்களை ஆக்கிஅதனுட்புறத்தில்கல்யாணமகோற்சவத்தினைத்தரிசிக்கவருபவர்கள் மனவெழுச்சியுடன் வாசஞ்செய்யத்தக்க பலமாளிகைகளும் உப்பரிகைகளுமேற்படுத்தி விசாலமுற்றிருக்கும் வீதிகளைப்பிரித்து இடையிடையிற் சித்திரங்கள் பளிங்குமண்டபங்கள் சந்திரகாந்தத்திண்ணைகள் முதலியவைகளை வரிசைவரிசையாகவகுத்துக் கல்யாணத்திற்குரியபண்டங்களை வைக்கத்தக்க பண்டாரவரைகளைமுடித்துத் தாமரைஅல்லிமுதலியபுட்பங்கள் மலிந்திருக்கின்றதடாகங்கள் ஓடைகள் கேணிகள்முதலியவைகளைத் தக்கவிடங்களில் ஆக்கி வானையளாவித்தழைத்தோங்கிக் குளிர்ந்தநிழலைப்பிரப்பிக் கனிவருக்கங்களைக்கொண்டிருக்குஞ் சோலைகளும் தோப்புக்களும் உண்டாக்கிப் பரிமளமிகுந்த பலபுட்பசாதிகள்மலிந்திருக்கின்ற நந்தவனங்களையும் பூங்காவுகளையுஞ் சிருட்டித்துமுடிந்தவுடன் அந்நகரத்தினடுவில் மணச்

சடங்குகள்முடித்தற்கு ஓர் கல்யாணமண்டபத்தை விசாலமாய்ப் படைத்து அதன்மத்தியில் நவரத்நமயமாகிய சிங்காசனமொன்றைப் பலவிசித்திரங்களோடமைத்து அதைச்சூழ்வரத் திருமாலாதியதேவர்களும் முனிவர்களும் களித்திருக்கத்தக்க பீடங்களை அணிஅணியாகவமைத்துப் பலசிறப்பட்டுகளாற் சோடித்திருக்கின்றவிதானங்களிலுஞ் சொர்ணமயமாய்த்தோன்றுகின்ற மண்டபத்தின்மேற்புறங்களிலும் முத்துமாலைகள் புட்பசரங்கள் மயிற்பிச்சங்கள் முதலியவைகளைத் தொங்கவிட்டு நவரத்தினங்களிழைத்திருக்குஞ் சுவர்ப்புறங்களிலும் பருத்தோங்கிநிற்கும் பலவிதத்தூண்களிலும் பொற்பாவைகள் சித்திரபிரதிமைகள் நிலைக்கண்ணாடிகள் முதலியவைகளைப்பதித்து ஓமகுண்டத்தையும் விசாலமாகப்படைத்துப் பிரமதேவனைக்கண்டு அறிக்கையிட்டான்.

உடனே பிரமதேவன்விரைந்துவந்து அவ்வவற்றின்சிறப்புகளைக்கண்டு அதிகசந்தோஷங்கொண்டவனாய் மேருவுங்கண்டு நாணத்தக்க பிரகாசத்தோடுமிருக்கின்ற இந்நகரத்தினழகைக் காண்பதற்குச் தேவேந்திரனைப்போல ஆயிரங்கண்களைப் பெற்றிலனேயென்று ஆசையோடு வருத்தமுற்றனையின் அத்தேவதச்சனால் நிருமித்த நகரத்தின்சிறப்புகள் என்போலிகளால் அளவிட்டுரைக்கப்படுவனவோ? பின்பு பிரமனானவன் சிலகாரியக்காரரைத்தூத்தி ஆகாயகங்கையைத்தருவித்துத் தருப்பைமாவிலைசமித்து முதலிய ஓமத்திரவியங்களைச்சேகரித்து வாழைகமுகுதெங்கின்குலை முதலிய சிறப்புக்களை வேண்டுமிடங்களில் அணிபெறநாட்டி வீதிகடோறும் பனிநீரையிறைத்துப் புழுதியையடக்கி முற்றமெங்கணுஞ் சந்தனக்குழம்பினால்மெழுகிப் பலவிசித்திரங்களான கோலங்களையுமிடுவித்துப் பாலிகைகரகமாதிய மங்களத்திரவியங்களை வருவித்துப் பலவிளக்கு குடத்தீபம் முதலியசோதிகளையமைத்து இன்னும் இத்தன்மையவாகிய எல்லாச்சிறப்புகளையும் சர்வஜாக்கிரதையோடு நிறைவேற்றிக்கொண்டிருந்தான்.

அச்சமயத்தில் முன்பு பிரமதேவன் வரைந்தனுப்பிய திருமணப்பத்திரிகையைக்கொண்டுபோன தேவதூதர்கள் வாயுவேகமநோவேகமுந்தங்கட்குப் பிற்படத்தக்கதாகவோடி அவ்வவர்கட்கறிவிக்க உடனேஅம் மணவோலையைவாங்கி நிமிர்த்துவாசித்துச்

சந்திரர் சூரியர்முதலிய நவக்கிரகங்கள் முப்பத்திமுக்கோடிதேவர்கள் நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகள் கருடர் காந்தருவர் சித்தர் வித்தியாதரர் போகபூமியர் ஆகாயவாசிகள் பாதலவாசிகள் சேடனுதிய நாகராசர்கள் மற்றதீபாந்திரங்களிலிருப்பவர்களும் தங்கள் தங்கள் மனைமக்கள் சுற்றத்தினர் முதலியகூட்டங்களோடு ஏகமாய்த்திரண்டு கடையுகத்திற் சத்தசாகரங்களுங்கரைபுறண்டு மேருவைச்சூழ்வதுபோல் தேவதேவோத்தமராகிய கணேசமூர்த்தியினுடைய திருக்கல்யாணசம்பிரமத்தைத்தரிசித்து ஈடேறுங் களிப்பினராய்ச் சயவுச்சாகங்களுடன் ஓமென்னுஞ்சத்தமெழ நாற்புறங்களினுமிருந்துவந்து தேவத்தச்சனுல் நிருமாணித்திருக்கின்ற நகரமெங்கணும் நெருங்கினுர்கள் பின்பு, பிரமதேவனுனவன் வந்தபரிசனங்கட்கெல்லாம் சகலவாபரணம் உணவுமுதலியவைகளை அவ்வவர்கட்குவேண்டுமட்டும் அளித்துவரும்படிச் சங்கநிதி பதுமநிதி சிந்தாமணி பஞ்சதாரு காமதேனு முதலானவைகட்காக்கியாபித்துத் தான் பின்பு நடத்தவேண்டிய முயற்சிகளிற் பிரவேசித்தான். இப்பால் அக்காமதேனு முதலியவைகள் பிரமனிட்டகட்டளையின்படி சகலசெல்வங்களையும் வந்தவர்கட்கெல்லாம் தந்துவர அவைகளை இந்திரன்முதலிய தேவர்கள்பெற்றுக்கொண்டு மனக்களிப்படைந்து வேறொருதெய்வலோகத்திலடைந்தவர்களைப்போல அளவில்லாத ஆனந்தக்கடலுள் மூழ்கினுர்கள். அந்நகரத்துள்ளோர்களும் எந்தையாகிய கணேசமூர்த்தியினது திருக்கல்யாணத்திற்குச்செய்துவைத்த நூதனவலங்காரங்களைக்கண்டு காணக்கூடாத உயர்ந்தபாகதியை யடைந்தவரையொத்துக்களிப்படைந்தார்கள் அந்நகரத்தின்கண் பன்னிரண்டு சூரியர்களும் சந்திரர்களும் உடுக்கூட்டங்களும் ஒருமிக்கக்கூடியிருக்கின்றமையால் அங்கு இராப்பகலெனுங் காலவேற்றுமைகள் இல்லாது ஒருதன்மையாகியிருந்தது. காமதேனு கொடுக்காநின்றவுண்டிகளையும் கற்பகத்தருவளிக்கின்ற ஆபரணங்களையும் அந்நகரத்துக்குவந்திருக்கின்ற மனிதர்களும் மங்கையர்களும் பெற்றுக்கொள்வதனுல் அவர்கள் தங்கள்பெயரின் மாத்திரம் வேறுபட்டிருந்தார்களேயன்றி உருவத்தில் ஒருவரையொருவர் ஒத்தவராயிருந்தார்கள். பாரிசாதம் மந்தாரம்

கற்பகம் தேவதாரம் சந்தானம் என்றபஞ்சதருக்கள் நெருங்கிய சோலைகளானவை பலவதிசயங்களையுண்டாக்கச் சிலர் அவ்வற்புதங் களைப்பார்த்து அவ்விடங்களைவிட்டு நீங்காதவர்களாயிருந்தார்கள்.

இவ்வாறு அளவற்றபெருமிதங்களோடு தேவதச்சன் நிரு மாணித்த அம்மண்டபத்தின்சிறப்புகள் யாவராலளவிட்டுரைக்கற் பாலன. இப்பால் நாரதமகாமுனிவர் சகலசம்பிரமங்களையுங் குறை வின்றி நிறைவேற்றியிருப்பதைப்பார்த்து மனங்களித்து விரைந் தெழுந்து வெள்ளியங்கிரியைச்சேர்ந்து சிவபெருமான் சந்நிதான த்தையடைந்து மும்முறைவலம்வந்து சாஷ்டாங்கமாய்வணங்கி ஓ தயாநிதியே விநாயகப்பெருமான் திருக்கல்யாணமகோற்சவத்திற் குரிய சகலவலங்காரங்களுஞ்செய்துநிறைவேறின அரசர்கள் தேவ ர்கள் முனிவர்கள் முதலாயினோர்வந்து நெருங்கியிருக்கின்றனர். தேவரீர் அடியேங்கள்மீது கிருபைபுரிந்து எழுந்தருளவேண்டு மென்று விண்ணப்பஞ்செய்துகொள்ளச் சிவபெருமான் சந்தோ ஷித்து விநாயகமூர்த்தியையழைத்து ஐயனே பிரமனால் வளர்க்க லுற்ற சித்திபுத்திகளைத் திருமணஞ்செய்வதற்கான கோலத்தைக் கொள்ளுகவென்று திருவாய்மலர்ந்தனர்.

அதுகேட்ட சுத்ததத்துவமூர்த்தியாகிய விநாயகக்கடவுளான வர் தெய்வகங்கையிலாடித் தேவர்களுடைய இமையாவிழிகளை இடைவிடாது இமைக்கச்செய்யும் வனப்பினைவாய்ந்த தமது திரு மேனியின் ஒளியைச் சிறிதுதணியச்செய்பவர்போலப் பீதாம்பரத் தையெடுத்து அரையிற்சாத்தி வாசனைவீசுகின்ற கூட்டுவருக்கச் சந்தனத்தை மார்பினிடத்துந் தோள்களினிடத்தும் பூசிக்கொண் டார். சந்திரனை முடியிலணிந்ததைத் தெரிந்துகொண்ட மற்றக் கோள்களானவை தாமும் முடிமேலேறியிருப்பதற்கெண்ணி அரிய தவங்களைச்செய்ய அவைகளையுந்தமது நன்முடியிற் சூட்டிக்கொள் வதுபோல் மிக்கவொளிபொருந்திய நவமணிகளை வரிசையாகப் பதித்த பொன்முடியினைச்சூட்டிக்கொண்டார்.

இவ்வாறு விநாயகக்கடவுள் திருமணக்கோலங்கொண்ட சிறப் பைச் சிவபெருமான் கண்களிக்கப்பார்த்து ஈராயிரமருப்புடைய

மலைபோன்று பாரித்திருக்கின்ற அயிராவணத்தை அவருக்குத் தந்து தாமும் உமாபரமேஸ்வரியும் ரிஷபவாகனத்திலெழுந்தருளினார்கள். கூரியவேலாயுதத்தையேந்திய முருகக்கடவுள் மயில்வாகனத்திலேறியருளினார் துவாதசாதித்தர் ஏகாதசருத்திரர் அட்டவித்தியேஸ்வரர் அட்டவசுக்கள் அட்டதிக்குபாலகர் முதலிய எல்லாத்தேவர்களுஞ் சர்வாலங்கார சோபிதராய் அவ்வவர்வாகனங்களிலேறிப் புடைசூழ்ந்தார்கள். நிகும்பன் கும்பன் சங்கபாலன் குமுதன் பானு தனஞ்செயன் தசமுகன் காலபாசன் விசயன் முதலிய பூதகணத்தலைவர்களோடு நந்திகேஸ்வரரும் மற்றுமுள்ள கணநாதர்களும் நெருங்கினார்கள், யாவருந்துதித்தற்குரிய முதன்மைபெற்றிருக்கின்ற பிரணவமந்திரம் வேதங்கள் கலைகள் காலங்கள் இராசிகள் சத்தகோடி மகாமந்திரங்கள் முதலியவைகளோடு காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீபதம், சூட்சுமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், அநலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தமம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம், என்கின்ற இருபத்தெட்டு ஆகமங்களும் ஒவ்வொரு தேவவடிவங்களாகித்திரண்டுவந்தன. இவ்வாறு சகலசம்பிரமத்தோடு யாவரும் புடைசூழ்ந்து நெருங்கியசமையத்தில் விநாயகமூர்த்தியானவர் அயிராவணத்திலாரோகணித்துப் பூதகணங்கள் புகழ்பாடிவரவும் மாதவர் வேதமோதிவரவும் சந்திரவட்டக்குடைகள் ஆகாயவெளியைமறைக்கவும் பலவிதப்பட்டக்கொடிகள் இருமருங்கினுநெருங்கவும் சிலர் ஆலவட்டங்கள்வீசவும் சிலர் சாமரைகளிரட்டவும் தோற்கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி என்கிற பஞ்சவாத்தியங்கள் நாற்றிசைகளினுமுழங்கவும் இன்னும் அளவற்ற ஆடம்பரங்களோடு பெரும்புறக்கடல் பெருகுமாறுபோல் எள்ளிட இடமில்லாமல் ஒருவரோடொருவர் அடர்ந்து கிரீடங்களுடன் கிரீடங்கள் புசங்களுடன் புசங்கள் ஊடுதாக்க ஆச்சரியமார்க்கமாய்ச் செல்லுமளவில் அட்டபுயாசலங்களையுடைய சிவபெருமானோடு கணேசமூர்த்தி திருமணக்கோலங்கொண்டெழுந்தருளிவருவதைப் பிரமன் விண்டுமுதலிய தேவகணங்களாதியர்

கண்டு அளவளாவியவானந்தத்தோடும் எதிர்கொண்டு சென்று கற்பகமலர்களைத்தூவியருசித்துச் சாஷ்டாங்கமாகநமஸ்காரஞ்செய்து அந்நகரத்துள்ள இராசவீதியில் வலமாகவழைத்துக்கொண்டு போய்த் திருக்கல்யாண மண்டபத்திலெழுந்தருளச்செய்தார்கள்.

உடனே சரஸ்வதியானவள் சொர்ன்னகடத்தில் தெய்வ கங்கையையேந்திவந்து கணேசமூர்த்தியினுடைய திருவடிகளில் அபிஷேகிக்கப் பிரமதேவன் மிகுந்தவணக்கத்தோடு அத்திருவடிகளை விளக்கி மெல்லிய ஆடைகொண்டொற்றினன். பின்னர்ச்சிவபிரானும் உமாதேவியும் ஓராசனத்திலிருந்தனர் சுப்பிரமண்ணியர் முதலிய மற்றைத்தேவர்களெல்லாம் வெவ்வேறாதனங்களில் அமைந்தனர் விநாயகக்கடவுள் அம்மண்டபத்தினடுவில் அமைந்திருக்கின்ற மாணிக்கசிம்மாசனத்தில் ஆரோகணித்துத் தேவமாதர்கள் நடிக்கின்ற ஆடலினும் பாடலினும் தமது திருக்கண்ணோக்கினைச் சாத்தியிருந்தனர். அளவற்ற தேவஸ்திரீகள் வெள்ளடை பாகு வாழைக்கனி தெங்கின்கனி மற்றுமுள்ளபலாதிகள் இரத்திநாபரணங்கள் பூமாலைகள் சித்திரப்பட்டுகள் முதலான மங்கலவரிசைகளைத்தனித்தனி பொற்றாம்பாளங்களில் நிரப்பித் தங்கள் கைகளிலேந்திக்கொண்டு தாமரை பூரணகும்பம் கண்ணாடி தோட்டி முரசு மணிவிளக்கு கொடி இணைக்கயல் என்கிற அட்டமங்கலத்துடன் பலவாத்தியங்களும் முழங்க அந்நகரவீதியை வலமாகவந்து விநாயகப்பெருமான் வீற்றிருக்கின்ற திருக்கல்யாணமண்டபத்தில் தொகுப்பாகவைத்துவணங்கினர்.

இப்பால் அந்தப்புரத்திலிருக்கின்ற சித்திபுத்தியென்னுங் கன்னியர்களைச் சரஸ்வதி இந்திராணி இலக்குமி அதிதி அநசூயை அருந்ததி என்கிற மாதர்களறுவரும் வணங்கி வாழ்த்துதல்செய்து சிரோரத்தினங்களால் இழைத்திருக்கின்ற ஆதனத்திலெழுந்தருளப்பண்ணி அக்கன்னியர்க்குத் திருமஞ்சனமாட்டிப் பட்டாடையினைச்சாத்தி மணமிகுந்த சந்தனக்குழம்பைப்பூசி நெற்றியில் சிவந்த திலதப்பொடியினையிட்டுக் கூந்தலைமுடித்து மணமிகுந்த மலர்மாலைகளைச்சூட்டிப் பலவகை இரத்திநாபரணங்களையும் அலங்கரித்தார்கள்.

இவ்வாறு மணக்கோலத்திற்குரிய அலங்காரங்களையெல்லாஞ் சிறக்கச்செய்துமுடித்து அவ்விடத்துநின்றுநீங்கிச் சிவபிரான் இடப்பாகத்தமர்ந்த பார்வதிதேவியாருடைய கடைக்கணுக்கின் னேராகநின்று அன்னையே முன்னம் அடியேங்கள்செய்த தவப்பயனாகத் தேவரீர் ஆக்கியாபித்த பணிவிடைகளைக்குறைவின்றி நடாத்திவந்தன மென்றறிவித்துவணங்கி அத்தேவியாருடைய வறுக்கைபெற்றுப் பின்னரவ்வருவரும் அம்மங்கையரை நவரத்தின சிவிகைகளிலேற்றிப் பல விண்ணின்மாதர்களுந் தோழியர்களும் புடைசூழ்ந்துவரவும் வெண்பட்டுக்குடைகள் மயிற்பிஞ்சங்கள் முதலிய அலங்காரங்களோடு பலவகைக் கொடிச்சின்னங்கள் விளங்கவும் குடமுழாமுதலிய பலவாச்சியங்கண்முழங்கவும் அளவற்றவைபவங்களோடு வீதியிலெழுந்தருளச் செய்துகொண்டுவருமுன் முளைப்பாலிகை முதலியவெல்லாம் முறைமையாகச்சேர்த்து வைத்திருக்கின்ற கல்யாணமண்டபத்தில் ஜனகமகாமுனிவர் ஆசிரியராகி வந்து தருப்பை வெண்பொரி முதலிய பலவகைப் பொருள்களையுஞ்சேகரித்து முகூர்த்தவேளை பார்த்துக்கொண்டிருந்தனர்.

அச்சமயத்தில் ஒருவர்க்கொருவர் ஒப்பாவதன்றி மற்றொருவரொப்பில்லாத அம்மணப்பெண்களிருவோரும் வீதியை வலமாகிவந்து திருக்கல்யாணமண்டபத்திலிறங்கிக் கற்பகதருவின் இருமருங்கினும் படர்ந்திருக்கின்ற காமவல்லிக்கொடிபோலக் கணேசமூர்த்தியினுடைய பக்கத்திற்கலந்திருந்தார்கள். உடனே மண்ணில்வழுக்கி வீழ்ந்ததேவர்கள் மீட்டும் விண்ணிற்புக்கு மகிழ்வையடைந்ததுபோல இதுகாறுங் கணேசமூர்த்தியை நீங்கியிருந்த அம்மங்கையர் மீட்டும் அவர்சமீபத்தில் கலத்தலும் முன்னர் வேறுபட்டு விளர்த்திருந்த நிறத்தினைப் போக்கித் தங்கள் சுபாவவடிவத்தினையடைந்தார்கள்.

இப்பால் சகலகலைவல்லவராகிய ஜனகமகாமுனிவர் சங்கற்பஞ் செய்து புண்ணியாவாசனம்புரிந்து அம்மணப்பந்தலிலுள்ள பொருள்களையெல்லாந் தூய்மையாக்கிக் கணேசமூர்த்தியை வேதாகமங்களாற்றுதித்துத் தேன்கலந்தபாலும் பழமுமளித்து அருக்கியம் பாத்தியம் ஆசமனம் என்கின்ற மூன்றுமந்திரசலங்களையுந்தந்து

மணப்பெண்களுக்குக் கூறைமுதலியவைகளையணிவித்துப் பிரம தேவனைக்கூவினார் உடனே அப்பிரமதேவன் விரைந்துவந்து தம் பதிசமேதராயெழுந்தருளியிருக்கின்ற விநாயகக்கடவுளுடைய மணவணிக்கோலத்தை மனங்களிக்கக்கண்டு கரங்களைச்சிரமேற்கூப்பித் தொழுது துதித்துத் தன்னருகினிற்கின்ற சரஸ்வதியைப்பார்க்க அவள் பலதெய்வப்பெண்களுடன் துரிதமாகச்சென்று திருமஞ்சனங் கற்பகமலர் தூபதீபமுதலாகியபொருள்களைப் பொற்பள்ளயங்களிலேந்தித் தன்கணவன் சமீபத்துவந்துநின்றனள். அக்காலத்தில் ஜனகமகாமுனிவர்பணித்தருளியபடிக்குப் பிரமனானவன் வேதாகமவிதிப்படிப் பாதபூசைசெய்யத்தனித்தவனாய்ப் பொற்றட்டினிடத்தில் விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளைச் சேர்த்துத் தன்தேவியானவள் தங்கக்குடத்தில் நிரப்பிவைத்திருக்கின்ற கங்காசலத்தையெடுத்து மெல்லமெல்லக்கவிழ்த்துவரத் தான்சுத்தி செய்து திருவொற்றுடையால் ஈரத்தைப்புலர்த்திக் களபகஸ்தூரி முதலியவைகளைச் சேர்த்திருக்கின்ற சந்தனக்குழம்பையப்பிப்பஞ்ச தாருக்களினது புதியமலர்களைக்கொண்டருச்சித்துச் சாம்பிராணி தூபத்தைக்காட்டிக் கற்பூராஞ்சனங்கொடுத்துச் சோடசவுபசாரங்களோடு பூசனைகளை நிறைவேற்றியவுடன் உடல் பொருள் ஆவி யென்கின்றமூன்றையும் அநாதியிற்றானே தமக்கு அடிமையாகவுடைய கடவுளுக்குப் பரிபக்குவராயினோர் தங்கள் போதவொழிவினிமித்தம் மீட்டுமவைகளைச் சமர்ப்பிக்குமுறைமைபோல் விநாயகமூர்த்தியை அநாதிதொட்டுநீங்காத அச்சத்திகளைப் பிரமதேவனானவன் மீட்டும் பழமைபாராட்டி யளிப்பவனாய்க் கணேசமூர்த்தியினுடைய திருக்கரங்களில்தனது புத்திரிகளாகிய சித்திபுத்திகளின் திருக்கரங்களைசேர்த்துச் சுவாமி அடியேன் அருமையாக வளர்த்த இம்மங்கையரைத் தேவரீர் அங்கீகரித்து என்னையாட்கொள்ளவேண்டுமென்று சரஸ்வதிவிட்ட தெய்வதீர்த்தத்தால் தாராதத்தஞ்செய்துவணங்கினன்.

கணேசமூர்த்தியானவர் அவ்விண்ணப்பத்திற்கு அருள்சுரந்து முன்பு அப்பிரமன் கடைத்தேறுமாறு கொடுத்தருளிய சத்திகளாகிய அம்மங்கையரை மீட்டும் அவனிடத்தில்நின்று ஏற்றுக்கொண்டனர். பின்பு பிரமதேவன் இட்டசித்தியைப்பெற்றுக் களி

த்தவனுப் முக்கனிகளையும் ஆவின்பால் தேன் சர்க்கரையோடு கல ந்து பொற்கிண்ணத்திற்கொண்டுவந்து தேவரீர் இவற்றினைப்புசிக் தருளவேண்டுமென்று நிவேதித்தனன். பின்பு பேரீமுரசம் குடமு ழா வலம்புரிச்சங்கமுதலிய மங்களவாத்தியங்கள் முழங்கவும் தே வர் முனிவர் கின்னரர் கிம்புருடர் முதலியவர்கள் மனக்களிப்புடன், கரங்களைக்கொட்டிச்சயசயவென்றுபோற்றவும் ஏகாதசருத்திரர் முதலிய முப்பத்துமுக்கோடிதேவர்களும் பெருமகிழ்வுகொண்டு மங்கலவாழ்த்துக்கூறவும் அத்திரி ஆங்கிரசர் பரத்துவாசர் முதலிய ரிஷிபுங்கவர்கள் வேதாகமங்களால் துதித்துவாழ்த்தவும் தேவ துந்துபிகள் சத்திக்கவும் சனகமகாமுனிவர் ஓமகுண்டத்தைச்சார ந்து சுற்றிலும் அந்தணர்களை இருத்தித் தருப்பைகளைப்பரப்பி அக் கதைகளை இறைத்து மந்திரமலர்களால் பிரணவமுதலிய பிரதம தேவதைகளை வழிபட்டுப் பூரணகும்பம் குடவிளக்கு முதலியனவை களை ஆங்காங்கு விதிப்படிதாபித்துவைத்து முத்தீக்களையும் மந் திரபூர்வகமாக ஓமகுண்டத்திலெழுப்பி விநாயகக்கடவுளையும் சித்தி புத்திகளையும் அதனருகிலெழுந்தருளச்செய்து ரிஷிபுங்கவர்களும் அந்தணர்களும் வேதசாகைகளைச் சொல்லிச்சமித்துக்களைக் கிர மப்படிபோட்டுவர ஆவின்நெய்யைஊற்றி இடையிடையில் பொரி யையும் பாலையும்இறைத்து நவக்கிரக ஓமமுதலியகருமங்களை விதி ப்படி விநாயகப்பெருமான்முன்னிலையில் நிறைவேற்றிப் பூரணா குதியும் கொடுத்து அத்தீயினிடத்தெடுத்த மைக்குழம்பை மாப்பிள்ளையாருடைய திருநுதலிலிட்டு அவரால் கல்லியாணப் பெண்களுக்கும் இடுவித்து நாரதமுனிவர் மும்முறை பொரியிட ஓமாக்கினிக்காகுதிசெய்து மற்றச்சடங்குகளையும் வான்முறையாக் கிமுடித்தனர். பின்பு கல்லியாணப்பிள்ளைக்குத் திருமால் தோழரா யிருந்து கைலாகுகொடுத்துப் பீடத்திலிருந்தெழுப்பலும் இலக் குமிமுதலிய அறுவர்களும் தங்கள்நாயகியாகிய சித்திபுத்திகளைத் தழுவியெழுப்பி அவர்கள் சுண்டுவிரல்களை விநாயகப்பெருமான் சுண்டுவிரல்களால் பற்றச்செய்தார்கள் கணேசமூர்த்தியானவர் அத்தீக்குண்டத்தை மும்முறைவலம்வந்து வடபக்கத்திற்சேர்ந்து கலியாணப்பெண்களின் திருவடிகளைத் தமது திருக்கரங்களால் தூக்கித்தூக்கி நிலத்திலிட்டு முடிவில் அம்மியின்மீதுவைத்துட்

பதிவிரதாசிரோமணியாகிய வசிட்டமுனிவர்பத்தினியை எதிரிலழைத்து அவள்மீது தமது திருக்கண்சாத்தினர்.

இவ்விதமாய்த் திருக்கல்யாணசம்பிரமங்கள் அனைத்தும் கிரமப்படிமுடிந்தவுடன் விநாயகக்கடவுள் தமதுதேவியர்களோடு தாய்தந்தையர் திருவடிகளில்வணங்க அவர்கள் ஆசீர்வதித்து மனப்பூரிப்படைந்து நவரத்தினமயமாயிருக்கின்ற ஆசனத்திலிருத்தித் திருமாலைநோக்க அத்திருமால் தேவேந்திரனெடுத்துநீட்டுகின்ற தாம்பூலாதிகளை உருத்திரர்முதலாயுள்ள எல்லாத்தேவர்கட்கும் வரன்முறையாக்கொடுத்தனர். பின்பு சித்திபுத்திகளிருவரும் மணிச்சிவிகைகளிலேறிவர விநாயகமூர்த்தியானவர் அயிராவணத்தின்மேல் ஆரோகணித்து அளவற்றவாத்தியங்கள்முழங்க மங்களவாழ்த்துகள்சத்திக்கத் தேவர்கள் மலர்மாரிபொழியச் சந்திரவட்டக்குடைகள் ஆகாயத்தைக்கவிக்க விருதுக்கொடிகள் அண்டமுகட்டைநெருங்க இருமருங்கும் கவரிகள் இரட்ட ஆலவட்டங்களை நாற்புறங்களிலுமசைக்கக் கின்னரரிசைபாட அரம்பையர் நடமாட இவ்வாடம்பரங்களோடு வீதியிற் பவனிவர மாதர்கள் தெரிசித்து நீராஞ்சனம் பூரணகும்பம் மணிவிளக்கு முளைப்பாலிகை முதலிய மங்கலப்பொருள்களை ஏந்திப் புட்பம் சந்தனம் கதம்பம் முதலியவைகளைவீசி மிகுந்தபத்திவிசுவாசத்துடன் கரங்களைக் கூப்பித்தொழுது வாழ்த்துப்பாடல்களைப்பாடினர் இவ்வாறு விநாயகமூர்த்தியானவர் அலங்கிருதமான வீதிகளைவலமாகிவந்து கல்யாண மண்டபத்தையடைந்தனர்.

அப்போது காமதேனு சிந்தாமணி பஞ்சதருக்கள் வந்தவர்கட்கெல்லாம் பலபொருள்களையும் மழைபோற்சொரிந்தன இவ்வண்ணந் திருக்கல்யாணசம்பிரமங்கள் முழுவதும்நிறைவேறியபின்புத் தேவர்கள் முனிவர்கள் கணநாதர்கள் மண்டலவாசிகள் யாவரும் பார்வதிசமேதராகிய சிவபெருமானையும் தம்பதிசமேதராயெழுந்தருளியிருக்கின்ற விநாயகமூர்த்தியையும் தரிசித்துத் துதித்துச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து அவர்களின் திருவருள்பெற்று விடைகொண்டு தங்கள் தங்கள் பதவிகளிற்சேர்ந்தனர்.

பின்பு சிவபெருமான் தம்மோடுவந்த கந்தவேள் முதலியவ ரெல்லாம் புடைசூழ்ந்துவரச் சித்திபுத்திமணாளராகிய கணேசமூர்த்தியையழைத்துக்கொண்டு பார்வதிதேவியாரோடு கைலைமலைக்கெழுந்தருளி வீற்றிருந்தனர். விநாயகக்கடவுளும் பின்பு சூரியனால் பூசிக்கப்பட்ட உத்தமக்ஷேத்திரமாகிய தமது லவணபுரம் (உப்பூர்) என்னும் இவ்வியஸ்தலத்தைச் சித்திபுத்திகளோடும் அடைந்து வீற்றிருந்தருளினர்.

திருமணப்படலம்
முற்றிற்று.

## கயமுகாசுரன் வதைப்படலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே விநாயக மூர்த்தியானவர் கயமுக சங்காரஞ்செய்தருளிய கதையையும் சொல்கின்றேன் கேளுங்களென்று சூதபுராணிகர் சொல்கின்றார்.

ஊழிதோறும் ஓங்குவதாகிய மாண்புபொருந்திய கைலயங்கிரியில் வீற்றிருக்கின்ற சிவபெருமானைத் திருமால்முதலிய தேவர்கள் தரிசித்துத் தம்மை மிக வருத்துகின்ற கயமுகாசுரனுடைய கொடுமைகளை விண்ணப்பஞ்செய்து அவனைச் சங்கரித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

சிவபெருமான் அதைக்கேட்டு அங்ஙனமே செய்து உங்களைக் காத்தருள்வோமென்று விடைகொடுத்தருளினர். அப்பொழுது வசந்தகாலம் நேர்ந்தது சிவபெருமான் குளிர்ச்சிவேண்டித் தமது தேவியாரோடும் உய்யான வனத்தையடைந்து அதில் கொன்றை கூவிளம் கோங்கு மந்தாரம் பாடலம் புன்னாகம் சண்பகம் வாழை வகுளம் அசோகம் முதலாகிய விருக்ஷங்கள் மலிந்திருக்கின்ற அலங்காரங்களையெல்லாம் பார்த்துக்கொண்டே வந்து அங்கிருந்த ஓர் சித்திர மண்டபத்திலெழுந்தருளினர்.

அப்போது உமாதேவியார் அம்மண்டபத்தின் சுவர்களிலெழுதியிருக்கின்ற சித்திரவலங்காரங்களையெல்லாம் பார்த்துக்கொண்டே வர அவைகளில் ஓர்பால் சத்தகோடி மகாமந்திர சொரூபங்களும் அவைகட்கெல்லா முதலில் பிரணவ மந்திர சொரூபமும் அதில் ஆணுனையும் பெண்ணுனையும் புணர்ச்சிசெய்திருக்கும் பாவனையா யெழுதியிருப்பதைக்கண்டு சுவாமி இதென்னவென்று சிவபிரானைக் கேட்டனர். அதற்கவர் தமது தேவியாரைப் பார்த்துப் பெண்ணே யாம் உன்னோடு சம்பந்தமாகி லோகங்கட்குபகாரமாய் நடப்பிக்கத்தக்க கருணைரசமாகுமென்று திருவாய் மலர்ந்து புணர்ச்சி செய்திருக்கின்ற அந்த யானைகளில் ஆணுனையைத் தாம் பார்த்துக்கொண்டிருந்தனர். உமாதேவியார் பெண்ணுனையைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இவ்வாறு லோக காரணர்களாகிய இருவரும் அவைகளை இன்போடு பார்த்துக்கொண்டிருத்தலும் அந்த யானைகளினுடைய புணர்ச்சி முடிவில் பிரணவ சரூபியாயிருக்கின்ற விநாயகமூர்த்தியானவர் ஊழிக்காலத்தில் கோடிசூரியர்கள் ஒன்றாய் உதயஞ்செய்ததுபோல அளவற்ற பிரகாசத்தோடும் உதித்தருளிச் சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்தனர். உடனே அவ்விருவரும் ஆனந்தங்கொண்டு தமக்குப் புத்திரனுகத் திருவவதாரஞ் செய்தருளிய விநாயகமூர்த்தியைப் பரிவோடெடுத்து அணைத்து உச்சிமோந்து உள்ளம் பூரித்துத் தங்கள் மடியின்மீது வைத்துக்கொண்டு சிவபிரான் இதனைத் திருவாய்மலர்ந்தருளுவதாயினர். ஓ குமாரனே என்னின் வேறுகாமல் எனக்குப் பிள்ளையாகி இருக்கின்ற உன்னை யார் வணங்குகின்றார்களோ அவர்கட்குச் சகலவிடையூறுகளையும் தீர்த்து அவர்கள் விரும்பிய காரியங்களை விரைவில் கைகூடும்படியாக அநுக்கிரகஞ் செய்திடுக, கணங்கட்கெல்லாம் தலைமை பெற்றிருந்து கிருபையை வழங்குக, அதனால் யாவரும் உன்னைக் கணபதியென்று சொல்லுக, உன்னை யாவரும் எக்காரியத்திலு முன்னதாக வணங்குக, அவ்வாறு வணங்காதோர்க்கு நீ இடர்களைப் புரிக, இவையன்றி அசுரர்கட்கெல்லாம் அரசனாய் யாவரும் அஞ்சத்தக்க கோரனாய் மிக்க கொடிய செருந்தையுடையவனாய்த் தேவர்கட்கெல்லாம் துன்பத்தை விளைக்கின்றவனாய் கயமுகனென்னும் பெயரை வகித்தவனாய் ஒரு அசுர

னிருக்கின்றான், அவனை நீ விரைவில் சமர்க்களத்திற் சங்கரித்து விண்டு முதலியோர் மூழ்கியிருக்கின்ற துக்கசாகரத்தைத் தூர்த்து அவர்களைக் கிருபையோடும் காத்தருள்கவென்று திருவாய்மலர்ந்து உமாதேவியாரோடு அச்சித்திரமண்டபத்தைவிடுத்துக் கணபதிப்பெருமானை யழைத்துக்கொண்டு சென்று அவரைத் தமது கயிலாயவாய்தலின் முகப்பிலிருக்கவைத்து அந்தப்புறத்திற் சென்றருளினர். அப்போது நந்திதேவர் முதலிய கணத்தலைவர்களும் விண்டு முதலிய தேவர்களும் கருணாநிதியாயெழுந்தருளிய கணபதிமூர்த்தியைப் பணிந்தெழுந்து வேதாகம முதலியவைகளாற் றுதிசெய்து விடைபெற்று அவரது பெருங்கருணையினால் அவ்வவர்களுடைய பெரிய அதிகாரங்களைச் செலுத்துவதற்குப்போனார்கள் அந்தப்புறத்திற்சென்ற சிவபிரானும் உமாதேவியாரும் சரசசல்லாபத்தோடும் அளவளாவி மகிழ்ச்சியுற்றிருந்தார்கள்.

இவ்வாறு மகிழ்ச்சிபொங்கிச் சரசசல்லாபத்துடனே அளவளாவியிருக்கின்றபோது சிவபிரான் உமாதேவியாரைப்பார்த்துப் பெண்ணே நாமிருவருஞ் சூதாடுவோம் அச்சூதில் நீ தோர்ப்பையாயில் உனது ஆபரணங்களையெல்லாம் கொடுத்துவிடக் கடவை நாம் தோற்போமாயில் நமது ஆபரணங்களைக் கொடுத்துவிடக் கடவோமென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கு உமாதேவியார் சம்மதித்து அப்போது சிவபிரானைத் தரிசனஞ்செய்ய வந்திருந்த தனது சகோதராகிய விண்டுவைக்கூவி ஓ சேட்டனே இப்போது யாமிருவரும் ஆடப்போகின்ற சூதுக்கு நீ சாக்ஷியிருக்கவேண்டுமென்று கேட்டனர் அதற்கவரும் சம்மதித்து நின்றனர். பின்பு சுந்தரர் முதலிய பரிசனங்களெல்லாம் அக்குறிப்பினையறிந்து சூதாடு கருவிகளைக்கொணர்ந்துவந்து சிவபிரானெதிரில் நீட்டினார்கள். அவைகளைச் சிவபிரான் கையேற்று விண்டுவினிடத்தில் தந்து இவைகளைக் கிரமப்படி வைத்திடுகவென்று கட்டளையிட்டனர் அவ்வாறே அவைகளையெல்லாங் கிரமப்படி வைத்து அவ்விருவர்களுடைய ஆட்டங்களையும் பார்த்துக்கொண்டிருந்தனர். அவ்வாட்ட முடிவில் உமாதேவியார் செயித்தனர். அதைச் சிவபிரான் கண்டு பரியாசத்தினாலோ மற்ற யாது காரணத்தினாலோ உமாதேவியாரைப்பார்த்துப் பெண்ணே நீ நமக்குத்தோற்றனையாதலால்

உனது ஆபரணங்களையெல்லாங் கழற்றி நம் முன் வைக்கக் கடவையென்று திருவாய்மலர்ந்தனர். அதனைக் கேட்டலும் உமாதேவியார் சிவபிரானைப்பார்த்து நகைத்து சுவாமி அடியாள் செயித்திருக்கத் தேவரீர் குற்றமற்ற வேதங்களைத் திருவாய்மலர்ந்தருளிய வாக்கினால் எற்றினுக்கு இத்தன்மைத்தான பொய்யை நாணமில்லாமல் சொன்னீர்கள். தேவரீருடைய திருமேனியிலுள்ள ஆபரணங்களை வாங்கி வைத்தருள்கவென்று கூறினர், அதற்குச் சிவபிரான் புன்னகைகொண்டு பொய்ச்சாட்சி சொல்லும்படியாக விண்டுவுக்குத் தமது புருவத்தை நெரித்துச் சைகை காட்டி மீட்டும் உமாதேவியாரை நோக்கி நாமே செயித்தனமென்று திருவாய் மலர்ந்தனர். அப்போது விண்டுவானவர் என்செய்வர் மேல்வரும் விளைவைச் சிறிதுமறிந்து கொள்ளாதவராய் உமாதேவியாரைப் பார்த்து அம்மணீ இப்போது சுவாமிக்கு நீர் தோற்றமையால் உமது ஆபரணங்களை அவருக்குக் கொடுக்கவேண்டாமோவென்று கூறினர். அதைக்கேட்டலும் உமாதேவியார் கோபித்து அவ் விண்டுவை உறுத்துப்பார்த்து அறிவற்றரே எங்களுடைய செயிப்பையுந் தோற்பையுங் கண்ணிற் கண்டிருந்தும் என்ன லாபத்தை நினைந்து உண்மையைச் சொல்லாமல் பொய்ச்சாட்சி சொன்னீர் நீர் இவ்வாறு சொல்லினமையால் இனிக் கண்கெட்ட மலைப்பாம்பாகித் துன்பமுறக்கடவீரென்று சபித்தனர். அச்சாபத்தைக் கேட்டலும் திருமாலானவர் நடுங்கிச்சிவபிரானைப்பணிந்து உமாதேவியாரிட்ட இச்சாபத்திற்கு ஓர் தீர்வு சொல்லியருளல் வேண்டுமென்று பிரார்த்திக்கச் சிவபிரான் கிருபை சுரந்து நீர் வடதிவிற் சென்று நம்மைத் தியானஞ்செய்துகொண்டிரும் இன்னும் சிலதினத்துக்குள் கயமுகாசுரனைச் சங்காரஞ்செய்து கணபதிமூர்த்தியானவர் அவ்வழியே வருவர் அவரால் இச்சாபம் நீங்குமென்று அருள் செய்தனர். திருமாலானவர் அவ்வாறே சென்று மலைப்பாம்பாகியிருந்து கணபதிமூர்த்தியின்வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இவ்வாறிருக்க,

இந்திரன் முதலிய தேவர்கள் அசுரர்கள் செய்யுங் கொடுமைக்குப் பயந்து சகல திரவியங்களோடுங் கயிலாயத்தை நோக்கிச் சென்று முதல்வாய்தலின் முகப்பில் கணத்தலைமை பெற்றிருக்

கின்ற எமது கர்த்தனைப்பணிந்து பூசித்து இருகரங்களையுங் கூப்பி வேதாகமங்களினால் அளவற்ற தோத்திரங்களைச் செய்து நின்றார்கள். அவர்களைக் கணபதிமூர்த்தி கிருபையோடு பார்த்து அன்பர்களே உங்கட்கு வேண்டியவைகளைக் கேட்பீராகவென்று திருவாய் மலர்ந்தனர் அதற்குமேல் தேவர்களெல்லாம் ஆனந்தங்கொண்டு சுவாமி அடியேங்களை நாடோறும் வருத்திவருகின்ற கயமுகாசுரனைத் தேவரீர் சங்காரஞ் செய்து அடியேங்களுடைய துயரத்தை நீக்கியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அதற்குக் கணேசமூர்த்தி அவ்வாறே செய்தருளுவமென்று கிருபை வழங்கித் தமது சிம்மாசனத்தைவிடுத்துப்பூதாகடமெல்லாம் தலைவணுப் மலையைப்போன்று பாரித்து விளங்குஞ் சரீரத்தினால் அசலனென்னும் பெயரை வகித்திருக்கின்ற ஒருவனைக் கூவி அவனது கந்தரத்திலாரோகணித்தார் உடனே ரணபேரி ஜயபேரி வெற்றிச் சங்க முதலிய வாத்தியங்கள் முழங்கின கொடி கொடை சாமரை முதலிய சின்னங்கள் இருமருங்கினும் நெருங்கின இடியேற்றினை யொப்பச் சத்திக்கும் பெருந் தொனியையுடையவர்களாய்ப் பிரளயாக்கினியைச்சொரிகின்ற கண்களையுடையவர்களாய்ப் பர்வதங்களை யொத்துவிளங்கும் புசங்களில் அளவற்ற ஆயுதங்களை யேந்தினவர்களாய் அநேக பூதவீரர்கள் புடைசூழ்ந்தார்கள். பின்பு கணேச மூர்த்தியானவர் இவ்விதவாடம்பரங்களோடு கயிலாயத்தினின்றும் வெளிக்கொண்டு கயமுகாசுரன் அரசாக்ஷிசெய்துவருகின்ற மதங்கநகரத்தின் சமீபத்திலமர்ந்தருளினர். யோகியர்கள் தங்கள் ஞானவுணர்ச்சியினாலறிந்தாலல்லது ஏனையோராலறியவொண்ணாத கணபதிமூர்த்தியானவர் இவ்வாறு யுத்தசன்னத்தராய் வெளிக்கொண்டு வருவதைக் கயமுகாசுரன் அறிந்து ஆயிரம் வாகினி சேனைகள் தன்னைப் புடைசூழும்படியாக வெளிக்கொண்டு குடை கொடி முதலிய சின்னங்களோடும் அமரர்களுங் கண்டு நடுங்கத்தக்க ஆயுதங்களோடும் வந்து யுத்தஞ்செய்யத் தொடங்கினன். அப்போது பூதவீரர்கள் தாக்கிய தாக்கலிலே அளவற்ற அவுணவீரர்கள் துடைகளறுந்தும் இடைகளொடிந்தும் வால்கள் முறிந்தும் கால்கள் மடிந்தும் தலைகள் பிளந்தும் சிலைகளிழந்தும் பலதிசைகளிலுஞ் சின்னபின்னப்பட்டு ஓடி மாண்டார்கள். அதைக்

கயமுகாசுரன் கண்டு கோபங்கொண்டு அளவற்ற பாணங்களைப் பிரயோகித்துப் பூதகணங்களைக்கொன்று கணபதிமூர்த்திக்கு எதிரே வந்து நின்று சிறிதும் அஞ்சாதவனாய் ஓ சிறுபிள்ளாய் இதுகாறும் என்னோடு பகைத்து உயிரோடிருந்தவர்கள் யார் நீ ஏன் வீணில் அழிவு தேடிக்கொள்கின்றனை யான் விட்டுவிடுகிறேன் இனியேனும் தப்பிப் பிழைத்துக்கொள் நான் சிவபிரானால் அடைந்திருக்கின்ற வரங்களைச் சிறிதும் அறிந்தாயில்லையென்று சொல்லினன்.

அதற்குக் கணேசமூர்த்தி புன்னகைசெய்து அடா பேதாய் உனக்கு வரங்கொடுத்தருளிய அச்சிவபிரானுடைய கிருபையினாலேயே உன்னைச் சங்கரித்துத் தேவர்களையெல்லாம் யதாப்பிரகாரம் சொர்க்கலோகத்தில் நிலைபெற்றிருக்கச்செய்கின்றேன் பார் இதை உண்மையாக நம்பக்கடவை நீ ஏன் வீணிற் பேசுகின்றாய் அச்சமின்றி என்னோடு யுத்தஞ் செய்ய வல்லபமிருந்தால் விரைவில் நடத்துகவென்று திருவாய்மலர்ந்தனர். அதை அவுணர்பெருமான் கேட்டுக் கோபித்துத் தனது மேருவையொத்த வில்லை வட்டாகாரமாகவளைத்து அளவற்ற குரூரமாகிய பாணங்களைக் கோடைமழையைப்போலப் பொழிந்தான் அவைகளை யெல்லாம் எமது கர்த்தர் தமது கதாயுதத்தினால் விலக்கி அவன் பிடித்திருந்த வில்லைக் கண்டித்தெறிந்தனர். பின்பு கயமுகாசுரன் மற்றொரு வில்லையெடுத்து வளைத்து அளவற்ற சரங்களை முன்னினும் அதிகமாகத் தொடுத்துவிட்டான். அவைகளையுங் கணபதிமூர்த்தி முசலத்தினால் விலக்கி வில்லையும் பொடிப்படுத்தினர் பின்பு கயமுகாசுரனனவன் அதிக உக்கிரத்தோடு நெருங்கி வந்து மற்றொரு வில்லில் இந்திராஸ்திரம் வருணாஸ்திரம் பிர்மாஸ்திரம் நாரசிம்மாஸ்திரம் முதலிய தேவாஸ்திரங்களை மாறி மாறிப் பிரயோகித்தான். அவையனைத்தும் வெளிப்பட்டமாத்திரத்தில் அனந்த உற்பாதங்களை விளைத்துக்கொண்டு வந்து எமது கர்த்தருடைய திருவடிகளில் வீழ்ந்துவிட்டன. அதைக் கயமுகாசுரன் கண்டு ஆச்சரியமுற்று மீட்டும் ஓர் தண்டாயுதத்தை யேந்தி வந்து யுத்தஞ்செய்தான். அத்தண்டாயுதத்தைக் கணபதிமூர்த்தியானவர் தமது கதாயுதத்தினால் துகள்படுத்தி அவுணர்பெருமான் மார்பினுந்தாக்கினர். உடனே அவன் சிறிதுநேரஞ் சோகித்திருந்தனன். அப்போது சுவாமி

தமது மழுவாயுதத்தினுல் அவனுடையசேனைகளையெல்லாம் சாம்ப லாக்கின்றனர். பின்பு கயமுகாசுரன்சோபந்தீர்ந்து தனது சே னைகளெல்லாம் அழிந்துகிடக்கின்றமையைப்பார்த்து இவன் மேலா ன பராக்கிரமசாலியேயன்றிச்சிறுவனல்லனென்று நிச்சயித்துமமா னமேலிட்டவனுய் மீட்டும் அளவற்ற ஆயுதங்களைக்கொண்டு யுத் தஞ் செய்தனன்.

அவன் ஒரு ஆயுதத்தினுலும் மரணம் நேராதபடிப் பெற்றிரு க்கின்ற சிறந்த வரத்தைக் கணபதிமூர்த்தி ஆலோசித்துத் தமது வலப்புறக் கொம்பின் முனையை யொடித்து அவன்மீதுவிட்டனர். அது வெளிப்பட்டுச் சகல லோகங்களுங் கலங்கும்படி யாக ஆர்ப்பரித்துச் சென்று கயமுகாசுரனுடைய மார்பைப் பிள ந்துபோய்ச் சமுத்திரத்தில் மூழ்கி மீட்டும் சுவாமியிடத்தில் வந்து சேர்ந்தது. பின்பு கணபதிமூர்த்தியானவர் சமுத்திரத்தில் ஸ்நானஞ் செய்துவந்த கொம்பினை ஓராயுதமாகத் தமது திருக்கர த்திலேந்தியருளினர். அப்போது தேவர்கள் புட்பவருடஞ் சொ ரிந்தார்கள். முனிவர்களெல்லாம் வேதாகமங்களினுற் பலமுறை தோத்திரஞ்செய்து பணிந்தார்கள் முன்பு எம்பெருமானுடைய கொம்பினுற் பிளக்கப்பட்டு மேருகிரி அடியோடேபெயர்ந்து விழு ந்ததுபோல நிலத்தில் வீழ்ந்த கயமுகாசுரன் பின்பு அம்மலைக்கு நிகரான ஓர் மூடிகமாகி வட்டமாய்ச் சிவந்து அழலையுமிழ்கின்ற விழிகளும் திசையானைகளையெல்லாம் வீட்டத்தக்க நீண்ட வாலும் கடைவாய்க்கு வெளிப்பட்டிருக்கின்ற பருத்த பற்களும் நீண்டு நிமிர்ந்து அழுத்தமுற்றிருக்கின்ற முகமும் சரீரமுழுதும் நிறைந் திருக்கின்றமயிரும் மலைகளையும் விருக்கங்களையும் உதைத்துச்சாய் க்க வல்ல கால்களும் ஆகாயத்தையளாவி.யுயர்ந்து உம்பருலகத் தையு மழிக்கத்தக்க முதுகும் பார்த்தவர்கள் அஞ்சிப் பயங்கொள் ளும்படியான கோரரூபங்கொண்டு சகல லோகங்களையுங் கலக்கி நாசம் பண்ணும்படியாக நடந்தான். அவ்வுருவத்தைத் தேவர்க ளும் முனிவர்களும் பார்த்துப்பயந்து பல திசைகளினும் ஒடிப் பதுங்கினுர்கள். இத்தன்மைத்தான கொடிய ரூபத்தோடு எதிர் த்து வருகின்ற ஆகுவினுடைய பராக்கிரமத்தை எமது கர்த்தர் கண்டு இமைப்போதில் அதனை அசைவறப் பிடித்து முதுகிலேறிமே

கணித்தருளினர். சுவாமியினுடைய திருமேனி தனது சரீரத்திற் பட்டமாத்திரத்தில் அவனுடைய அஞ்ஞானவிருள் விலகிப்போய் மெஞ்ஞான வொளிமிகுந்து மேன்மை பெற்றனன். இந்திரன் முதலிய தேவர்களெல்லாங் கணபதிமூர்த்தியினிடத்தில் விடை பெற்றுத் தம்பதிகளை யதாப்பிரகாரமடைந்து வாழ்ந்திருந்தார்கள்.

பின்பு கணபதிமூர்த்தியானவர் தமது ஆகுவாகனத்தைநடாத் திக்கொண்டு சகல சேனைகளும் புடைசூழ்ந்து வரும்படியாய் வட திசையை நோக்கி யெழுந்தருளினர். அவ்விடத்தில் நெடுநாள் ஓராலமரப் பொந்தில் குருட்டு மலைப்பாம்பாகியிருந்த விண்டுவான வர் அவ்வடிவத்தினின்று நீங்கிப் பழையபடி தெய்வரூபம் பெற் றுக் கணபதிக்கெதிரில்வந்து பணிந்தெழுந்து இரு கரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்று ஓ அட்டமூர்த்தமாயிருக்கின்ற அமலரோ தே வரீருடைய தரிசன வீட்சணத்தினால் அடியேற்கு உமாதேவியார் கொடுத்த சாபம்நீங்கும்படியான பேற்றினையடைந்தேன். இனி இதைவிட யான் பெறத்தக்கபேறு வேறென்னவிருக்கின்றதென்று மிக்கமனமகிழ்ச்சியோடும் புகழ்ந்து புட்ப முதலிய திரவியங்களாற் பூசனை செய்து வேதாகமங்களினாற் றோத்திரம் புரிந்து கைதட்டி நிருத்தமாடி மீட்டும் சாஷ்டாங்கமாய்ப் பணிந்தெழுந்து சுவாமி அடியேற்குத் தேவரீர் தரிசனங்கொடுத்தருளிச் சகல நன்மைகளை யுங் கிடைக்கச்செய்த இத்தினம் மார்கழிமாதச் சஷ்டியாதலால் வருடந்தோறும்வருகின்ற இத்தினத்தில் யாவரேனும் தேவரீர்க்கு வழிபாடு செய்வார்களாயின் அவர்கள் சகல அரிட்டங்களினின்று நீங்கிஇட்டகாமியார்த்தங்களைப்பெற்றுய்யும்படி அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனர் அதற்குக் கணேசமூர்த்தி அவ்வாறே செய்தருளுவமென்று கிருபைசுரந்து அவ்விண்டுவை யுந் தம்மோடழைத்துக்கொண்டு சகல சேனைகளோடும் கயிலாயத் திற்குச்சென்று சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்து விடைபெற்று முதற்கோபுரவாய்தலின் முகப்பிலெழுந்தருளினர். அப்போது விண்டுமுதலாயினோர் கணேசமூர்த்தியைப் பூசனை செய்து சுவாமி அடியேங்கள் இதுகாறும் மிகுந்த கொடுமையான கயமுகாசுரனுக்குக் குட்டினை முதலாகிய வணக்கங்களைச் செய்து அவனுடைய பணிகளை நடாத்திவந்தனம் அவ்வணக்கங்களை

இன்று முதல் அடியேங்கள் தேவரீருக்கெதிரே செய்கின்றனம் அவைகளைத் தேவரீரே வணக்கமாகக் கொண்டருளல்வேண்டும், அவ்வாறு தேவரீருக்கு வணக்கஞ்செய்வோர்கள் யாவராயினும் அவர்கட்கு இஷ்டகாமியார்த்தங்களைக் கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டனர்.

கணபதிமூர்த்தியானவர் அவ்வாறே திருவாக்கருளி அத்திருமால் முதலிய தேவர்களுடன் தமது யதாஸ்தானமாகிய லவணபுரம் (உப்பூர்) என்னும் மகாக்ஷேத்திரத்தையடைந்து வீற்றிருந்தருளினர். அப்போது அத்தலத்தில் திருமால் முதலாயினோர் கணேசமூர்த்தியைப் பூசனைசெய்து குட்டணம் தோப்புக்கரணம் முதலிய வணக்கங்களைச் செய்து நமஸ்கரித்துச் சகல வரங்களையும் பெற்று அவ்வவர்களுடைய பதவிகளையடைந்தார்கள்.

கயமுகாசுரன் வதைப்படலம்
முற்றிற்று.

---

# இராமன் பூசித்த படலம்

கடல்சூழ்ந்த இப்பாரதகண்டத்துள் சிறந்த ஆரியாவர்த்தமென்னும் இத்தேசத்தில் கோசலநாட்டின்கண் அயோத்திமாநகரில் சூரியவமிசத்தரசனாகிய தசரத மகாராசன் செங்கோல் செலுத்திப் பூமியை ஆண்டுகொண்டிருக்கின்றகாலத்தில் நெடுநாளாகியும் புத்திரப்பேறின்றி மனம் வருந்தித் தமது குலகுருவாகிய வசிட்ட மகாமுனிவரை வணங்கிச் சந்ததியுண்டாகும்படி யநுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அம்முனிவர் கிருபைகூர்ந்து ஓ தசரதமகாராசனே முன்னொரு காலத்தில் உரோமபதமகாராசன் தேசத்தில் பன்னிரு வருடம் மழையில்லாதிருந்த பஞ்சம் தாம் அடிவைத்தவுடன் மழைபெய்து மாறும்படிக்கருளிய மகானாகிய கலைக்கோட்டுமுனிவரைக்கொண்டு புத்திரகாமேஷ்டியாகஞ் செய்

வாயாகில் புத்திரப்பேறுண்டாமென்று மொழிந்தருளினர். அது கேட்ட தசரதமகாராசன் உடன் அவ்வாறே செய்ய எண்ணங்கொண்டு அக்கலைக்கோட்டுமுனிவரையழைத்துக்கொண்டு வந்து புத்திரகாமேஷ்டி செய்து அதில் எழுந்த அவிர்ப்பாகத்தைத் தம்மனைவியர் மூவர்க்கும் கொடுக்க மூத்த மனையாளாகிய கௌசலைக்கு இராமனும் இரண்டாவது மனையாளாகிய கைகேயிக்குப் பரதனும் மூன்றுவது மனையாளாகிய சுபத்திரைக்கு இலக்குமனனும சத்துருக்கனனும் பிறந்தனர் மூத்தகுமாரனாகிய இராமனுக்கு மிதுலா நகரத்துச் சனகன் மகள் சீதாதேவியை விவாகஞ் செய்வித்து நெடுநாள் அரசாக்ஷிசெய்துகொண்டிருந்து முதுமையில் இராமனுக்குப் பட்டங்கட்டுவிக்க முயலும்போது இரண்டாவது மனைவியாகிய கைகேயியானவள் கூனியின் துர்ப்போதனையால் மதிகெட்டு அதைத் தடுக்கும்பொருட்டுத்தனது நாயகனாகிய தசரதமகாராசனையடைந்து முன்பு நீர் எனக்குத் தந்திருக்கின்ற வரங்களிரண்டையும் இப்பொழுது கொடுக்கவேண்டுமென்று கேட்டனள் அதற்குத் தசரதன் கொடுக்கின்றேன் அவற்றைச் சொல்லென்றனன். அவள் இராமனை வனத்துக்கனுப்பல் ஒன்று பரதனுக்குப் பட்டங்கட்டுதல் ஒன்று என்றனள்.

அதுகேட்ட தசரதமகாராசன் மூர்ச்சித்து வீழ்ந்தனன் அப்பொழுது கைகேயியானவள் இராமனை வரவழைத்து உன்னை வனத்துக்குப்போகும்படி மகாராசாவினுடைய உத்தரவுஎன்றனள் அது கேட்டு இராமபிரான் தம்பி இலக்குமணனையும் மனைவியாகிய சீதாதேவியையும் கூட அழைத்துக்கொண்டு அயோத்தியினின்றும் புறப்பட்டுக்கால்நடையாய்த்தண்டகாரணியத்தைநோக்கிச்சென்று கங்காநதியின் கரையையடைந்து குகனோடு நட்புற்றுக் கங்கையைக்கடந்து பரத்துவாசமுனிவர் ஆச்சிரமத்தில் தங்கிச் சித்திரகூடமலையையடைந்தார் இவ்வாறு இராமபிரான் சென்றதை மந்திரிகள் சொல்லக்கேட்டலும் தசரதமகாராசன் தேகவியோகமாயினன் பின்பு இச்செய்கையைக் கேகயத்திற்குச் சென்றிருந்த பரதசத்துருக்கனர் கேள்வியுற்று அயோத்திவந்து பிதாவினுடைய ஈமக்கடன்களைச் செய்தனர்.

உடன் பரதன் சித்திரகூடத்திற்சென்று இராமபிரானைத் தரிசித்துவணங்கித் தந்தையின் மரணத்தைத் தெரிவிக்க அவ்விராமபிரானும் துன்புற்றுத் திலதர்ப்பணஞ்செய்துவிட்டுப் பரதனை நோக்கித் தந்தையின் சொற்படி நீ அயோத்தியில் இருந்து அரசாளுகவென்றும் யான் பதினன்கு வருடம் வனவாசஞ்செய்து வருகின்றேனென்றும் சொல்லினர். அதுகேட்ட பரதன் மறுத்தும் அவருடைய ஆக்கினைக்கஞ்சிப் பாதுகையைப் பெற்றுக் கொண்டு மீண்டு நந்திக்கிராமத்தை யடைந்திருந்தனன்.

பின்பு இராமபிரான் இலக்குமணன் சீதாதேவியுடன் சித்திரகூடத்தினின்றும் புறப்பட்டுத் தண்டகாரணியத்தை நோக்கிச் சென்றனர் அங்கு எதிர்த்த விராதனைக் கொன்று அகத்தியாச்சிரமத்தையடைந்து அவரால் கொடுக்கப்பட்ட வாள் வில் அம்பாரத்தூணிகளைப் பெற்றுக்கொண்டு பஞ்சவடி தீரத்தை யடைந்தார். அங்கு நின்று செல்லும்பொழுது சூர்ப்பநகை யென்பவள் சீதாதேவியைக் கைப்பற்ற அதுகண்ட இலக்குமணன் அவளது காதையும் மூக்கையுமறுத்துச் சீதாதேவியை மீட்டனன். அங்கு நின்று தெற்கு நோக்கிச்செல்லக் கரன் முதலிய அரக்கர்கள்வந்து எதிர்க்க அவர்களைக் கொன்று அங்கிருக்கும் பொழுது முன்பு காது மூக்கறுபட்ட சூர்ப்பநகையானவள் வந்து சீதாதேவியின் வடிவழகைச் சொல்லக்கேட்ட இராவணன் காமவெறி கொண்டு மாரீசனை அழகிய மானாய் அவ்விடத்திற்குச்செல்ல ஏவிவிட்டுத் தானும் பின்பு வந்தனன் அம்மாரீசனாகிய மான் வரக்கண்ட சீதாதேவி அதை அபேட்சிக்க அதனைத்தொடர்ந்து இராம லட்சுமணர்செல்ல இராவணன் சீதாதேவிதனித்திருப்பதைக் கண்டு நெருங்கிவர அவள் கண்டு பயந்து அக்கினிக்குளொளிந்துகொள்ள அவ்வக்கினியால் உண்டு பண்ணி வெளிப்படுத்தப்பட்ட மாயா சீதையை யுண்மையான சீதையென்று நினைத்துக் கைப்பற்றிக் கொண்டு இலங்கையில் சேர்ந்தனன் இவ்வாருகப் பின்பு இராமலட்சுமணர் மீண்டு பன்னசாலைக்குவந்து பார்க்கச் சீதையைக்காணுதவராய் அவளைத் தேடிக்கொண்டு தெற்கு நோக்கிச்சென்றனர் அங்குக் கவந்தன் என்பான் எதிர்க்க அவனைக் கொன்று சவரியின் ஆச்சிரமத்தை யடைந்து அவள் சீதாதேவியைத் தேடுவதற்கு மதங்கமலையில்

வானரபதியாகிய சுக்கிரீவன் இருக்கின்றான் அவனை நட்புற்று அவன் உதவியால் சீதாதேவியைக் கண்டுமீட்கலாம் என்றுசொல்ல இராம லக்குமணர் கிட்கிந்தைக் கருகிலுள்ள மதங்கமலையைச் சார்தலும் அங்குச் சுக்கிரீவனுடையசேவகனாகிய அநுமான் எதிர்வரக் கண்டு அவனால் சுக்கிரீவனிடஞ் சார்ந்து அக்கினி சாட்சியாய் அவனோடு நட்புற்றனர் பின்பு சுக்கிரீவனுக்குப் பகைவனாகிய வாலியைக்கொன்று சுக்கிரீவனைக் கிட்கிந்தைக் காசனாக முடிசூட்டி அங்கிருக்கப் பின்பு சுக்கிரீவன் வானரசேனைகளோடு இராமபிரானிடம் வந்து சீதாதேவியைத்தேடிக்கண்டு விரைவில்வரக்கடவீர்களென்று வானரசேனைத் தலைவர்களைக் கீழ்த்திசை மேற்றிசை வடதிசைகளுக்கு ஏவிவிட்டுப் பின்பு தென்திசைக்கு அநுமானைச் செல்லும்படி சொல்ல அப்பொழுது இராமபிரான் சீதாதேவிக்கு எனதடையாளமாகக் கொடுவென்று தன்கை முத்திராமோதிரத்தை அநுமான் கையில் கொடுத்தருளினார்.

அநுமான் முதலிய நால்வரும் தென்றிசை நோக்கிச்சென்று வனங்களிலும் மலைகளிலும் குகைகளிலும் தேடிச்சீதாதேவியைக் காணமல் தென்கடற்கரையிலுள்ள மகேந்திர மலையை யடைந்தனர் இலங்கைக்குச் செல்லக் கடலைத்தாண்டும் வலிமையை யுடையவன் அநுமானே யென்று அங்கதன் முதலாயினோர் சொல்ல அவ்வநுமான் அம்மலையினின்று மெழும்பி இலங்கையில் குதித்தான் அங்கு இலங்கைக்குக் காவலாயிருந்த இலங்கணி வந்து எதிர்க்க அவளையறைந்து கொன்றனன். உயர்ந்த மதிலும் ஆழ்ந்த அகழும் சூழ்ந்து பொன்மயமாய் விளங்கும் மாடங்கள் நெருங்கிய அவ்விலங்கைநகர் முழுதும் தேடியும் சீதாதேவியைக் காணதவனுய்ச்சோர்வுற்றுப் பின்பு அசோகவனத்தில் அரக்கமாதர்கள்சூழ்ந்து காவலாயிருக்க நடுவிலிருக்கின்ற சீதாதேவியைக் கண்டு இராமபிரானுடைய தூதன் யான் என்று சொல்லி இராமபிரானுடைய விர்த்தாந்தங்களையும் சொல்லி அவ்விராமபிரானுடைய மோதிரத்தையும் சீதாதேவி கையிற் கொடுத்தனன். பின் அநுமான் அவ்வசோகவனத்தை யழிக்க எதிர்த்த கிங்கரரைக் கொன்று பஞ்சசேனாதிபதிகளையுங் கொன்றனன் அச்செய்தியை யிராவணன் கேட்டுக்கோபங்கொண்டு இந்திரசித்தை அனுப்ப அவன் சென்று அவ்

வநுமானைப் பிர்ம்மாத்திரத்தால் கட்டி யிழுத்துக் கொண்டுவந்து தன் பிதாவாகிய இராவணன் முன் விடுத்தனன். அவன் அவ்வநுமானை நோக்கி நீ யார் என்று கேட்க அநுமான் உன்னை வாலிற் பிணித்தவனது தோளையறுத்த இராமபிரானுடைய தூதன் யான் என்று அவனை யிழித்துச் சொல்லிப் பதிவிரதா சிரோன்மணியாகிய சீதாதேவியை இப்பொழுதே விட்டு விடு இல்லாவிடில் இராமபிரானுடைய ஒரே பாணமானது உனது உடலைப் பருந்துகளுக்கு விருந்து செய்யுமென்றனன்.

அவ்விழிசொல்லைக்கேட்ட இராவணன் மிக்ககோபங்கொண்டு அநுமானது வாலில் துணியைச்சுற்றி நெருப்பூட்டிவிட அவ்வநுமான் அவ்விலங்கையை முற்றும் கொளுத்திவிட்டு வந்து சீதாதேவியை வணங்கிநிற்க அவள் இராமபிரானுக்குத் தன்னடையாளமாகக் கொடுக்கும்படித்தனது சூளாமணியைக்கொடுக்க அதைப் பெற்றுக்கொண்டு அநுமான் மீட்டும் கடலைத்தாவி மகேந்திர மலையை யடைந்து அங்கதனோடு அங்கு நிகழ்ந்தயாவும் சொல்லி அவர்களுடன் அங்குநின்றெழும்பிக் கிட்கிந்தைக்கு வந்து இராமபிரானையுஞ் சுக்கிரீவனையும் வணங்கிச் சீதாதேவியை யிலங்கையில் கண்டனன்என்று வணங்கிநின்று விண்ணப்பஞ்செய்து சூளாமணியையுங் கொடுத்தனன்.

அங்ஙனம் அநுமான் சொல்லியவுடன் இராமபிரான் சுக்கிரீவன் முன்னும் இலக்குமணன் பின்னும் வானரசேனைகள் சூழ்ந்துவரப் பிரச்சிரவண மலையினின்று புறப்பட்டு மகோததியாகிய கீழ்கடற்கரை யோரமாய்த் தெற்குநோக்கிச் செல்லுகின்றனர். அங்ஙனஞ் செல்லுமார்க்கத்தில் இரத்நாகரமாகிய தென்கடற்கரைக்கு முப்பது குரோசதூரம் வடக்கிலுள்ளதாகிய ஒரு வனத்தையடைந்தனர்.

அவ்வனமானது வன்னிவிருட்சங்களால்சூழ்ந்து பரிசுத்தமாய் இருக்கக்கண்டு அதனுள்புகுதலும் ஒரு திவ்வியமனோகரமாய் விநாயகக்கடவுள் வெய்யிலில் வீற்றிருக்கின்ற ஆலயமிருக்கக் கண்டு அவ்விநாயகமூர்த்தியை இராமபிரான் முதலியோர் தரிசித்

தனர் அப்பொழுது இராமபிரான் இவ்விநாயகமூர்த்தி சுயம்பு வாயும் அடியார்களுக்கு அநுக்கிரகிக்கும் கிருபாமூர்த்தியாயும் எழுந்தருளியிருக்கின்றனரே இக்கடவுளின் உற்பத்தியாது என உள்ளத்தில் ஞானநோக்கினால்நோக்கி முற்காலத்தில் சூரியதேவன் உபாசிக்க அவனுக்குப் பிரத்தியட்சமாய் எழுந்தருளி அவனது இடரைப்போக்கி வேண்டும்வரங்களைக்கொடுத்தருளி அவன் வேண்டியபடி வெயிலுகந்தருளிய விநாயகமூர்த்தியென்று தெரிந்துகொண்டு தானும் தன்மனைவியாகிய சீதாதேவியை மீட்பதற்காகக் கடலில் அணைகட்டி இலங்கைக்குச்சென்று இராக்கதர்களைத்தண்டித்து வெற்றிபெறும்படிக்கு வேண்டிய வரங்களைப் பெறும்பொருட்டு இவ்விநாயகக்கடவுளைப் பூசிக்கவேண்டுமென உள்ளங்கொண்டனர்.

அங்ஙனமே இராமபிரான் இலக்குமணன் சுக்கிரீவன் அநுமான் முதலியோரைநோக்கி இவ்விநாயகக்கடவுளைப் பூசிக்கவேண்டிய திரவியங்களைச் சேகரிக்கும்படிச்சொலல அவர்களும் அபிஷேகத்திற்குவேண்டிய பால்தயிர் முதலிய பஞ்சகௌவியங்களையும் தேன்முதலியவைகளையும் சந்தனம் புஷ்பம் முதலியனிவகளையும் தூபதீபங்களையும் முக்கனிகள் முதலியகனிகளையும் நைவேதனப் பொருள்களையும் உபசாரப்பொருள்களையும் தேடிக்தேடிக்கொண்டு வந்துசேர்த்தனர் அபபொழுது இராமபிரான் அவ்விநாயகப்பிரான் சந்நிதியிலிருக்கின்ற மகோததிதீர்த்தகட்டத்தில் விதிப்படி நீராடி மாவுரியுடுத்து விபூதிருத்திராக்ஷம்தரித்து அவ்விநாயகக்கடவுள் ஆலயத்திற்கு மேற்கிலுள்ள சூரியபுட்காணியில் தீர்த்தங்கொண்டு வந்து கடம்வைத்துப் பூசித்துச்செபித்து அவ்விநாயகமூர்த்திக்குப் பஞ்சகௌவியத்தாலும் தேன் கனிவர்க்கங்களின் சாறு இளநீர் முதலியவற்றாலும் அபிஷேகஞ்செய்து கடத்திலுள்ள மந்திரநீரால் வேதமந்திரத்தோடு அபிஷேகஞ்செய்து ஒற்றாடையால் துடைத்து வாசனைபொருந்திய கலவைச்சந்தனம் விபூதியிட்டுப் பொற்பட்டாடைசாத்தி இரத்தினகிரீடம்முதலிய ஆபரணங்களை அலங்கரித்து மந்தாரம் தாமரைமுதலிய மலர்களாலும் அறுகு வன்னிமுதலியவற்றாலும் விநாயகக்கடவுளின் ஆயிரம் திருநாமங்களையும் உச்சரித்து அர்ச்சனைசெய்து தூபதீபம் சுழற்றிக்காட்டி

மோதக முதலிய பண்ணியங்களையும் அறுசுவையோடுகூடிய ஓதனங்கள் பாயசம் முதலிய மகாநைவேதனங்களையுஞ்செய்து கற்பூரநீராஞ்சனமுஞ்செய்து பூஜைமுடித்துச் சந்நிதியில்நின்று தோத்திரம் செய்வதாயினர்.

எங்கும்நிறைந்து பிரணவசொரூபியாய் எழுந்தருளியிருக்கின்ற! விநாயகமூர்த்தியே! யான் மனைவியின்பொருட்டு மிக வருத்தமுற்றிருக்கின்றேன் இராவணன்முதலிய துட்டர்களைக்கொன்று வெற்றிபெற்று மனைவியை மீட்டுக்கொண்டு வரும்படிக்கும் இடையில்நேரும் விக்கினங்கள் நீங்கும்படிக்கும் வரம் தந்தருள்வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர்.

அங்ஙனமே வெய்யிலுகந்த விநாயகக்கடவுள் வரங்கொடுத்தருளப்பெற்றுச் சாட்டாங்கமாய்நமஸ்கரித்து வலம்வந்து மீட்டும் நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு இலக்குமணன் சுக்கிரீவன் அநுமான் முதலியோருடன் அங்குநின்று புறப்பட்டு அத்தலத்திற்குத் தென்மேற்கில் ஒருயோசனைதூரத்திலிருக்கின்ற ஒரு சுப்பிரமணியக்ஷேத்திரத்தையடைந்து அவரையும்பூசித்து வேண்டிய வரங்களைப்பெற்றுக்கொண்டு அதற்குக்கிழக்கில் கடற்கரையிலுள்ள தேவிபுரம்என்னும் தலத்தில் அணைகட்டுவதற்குத் தொடங்கி முதலில் நவக்கிரகங்களை அம்மகோததிதீரத்தில் பிரதிஷ்டைசெய்து சேதுவைக்கட்டி அதன்வழியாய் வானரசேனைகளுடன் கடலைத்தாண்டி இலங்கையிற்சென்று இராவணனாதி அரக்கர்களைச்சங்கரித்து வெற்றியடைந்து சீதாபிராட்டியை மீட்டுக்கொண்டு இராமபிரான் கந்தமாதனத்தில் இராமலிங்கபிரதிட்டை செய்து அயோத்தியையடைந்து பட்டாபிடேகம் செய்துகொண்டு செங்கோல்செலுத்தி வாழ்ந்து வீற்றிருந்தனர்.

## இராமன் பூசித்தபடலம் முற்றிற்று.

---

# வீமராசன் புத்திரப்பேறுபெற்றபடலம்.

கடல்சூழ்ந்த பூமண்டலத்தில் யாவராலும் புகழத்தக்க வளம் நிறைந்த விதர்ப்பநாட்டில் தேவருலகையொவ்விய மாடமாளிகை கூடகோபுரங்கள்முதலிய அலங்காரங்களோடு விளங்குகின்ற கவுண்டின்னியம் என்னும் ஒருநகரம் உள்ளது அந்நகரத்தில் தவசீலனாகியும் வேதவொழுக்கங்களில் தவறாதவனாகியும் வலிமிகுந்த புயங்களையுடையவனாகியும் தருமசிந்தையுடையவனாகியும் பகையரசர்கள் தோற்றுவந்துவணங்கும் பாதங்களையுடையவனாகியும் வீமன் என்னும் பெயரையுடைய ஒரு அரசன் செங்கோல் செலுத்திக்கொண்டிருந்தனன்.

அவ்வரசனுக்குக் கற்பில் அருந்ததியையொத்து இல்லற ஒழுக்கங்களில் தவறின்றிநடந்து வருகின்ற சாருகாசினி என்னும் ஓர் மனைவியிருந்தனள் அம்மனைவியோடு சகலசெல்வங்களையும் அனுபவித்துக்கொண்டு பெரியோர்சொல்கின்ற நெறிகளின்படி பெருமைபொருந்திய பூமண்டலத்தை அரசாக்ஷிசெய்துவருகின்றகாலத்து நெடுநாள் புத்திரபேறுஇல்லாமல் பலதெய்வங்களை வழிபட்டும் பலதானங்களைச்செய்தும் பலதருமங்களைச்செய்தும் யாகங்களைச்செய்தும் தனதுகவலையொழியாதவனாகி மனமெலிந்து தன் மனைவியைநோக்கிப் புத்திரப்பேறில்லாதார் இவ்வுலகத்தை அரசாளினும் இம்மை மறுமைப்பயன்களை அடையார்கள் வாழ்கின்ற இல்வாழ்க்கையும் பயனற்றதாகும் நமது செல்வங்கள் எல்லாம் ஒரு புத்திரப்பேறில்லாமல் வீணில் போகின்றதே! இனியாவது வனத்திற்சென்று பெரியோர்களையடுத்துத் தவம்செய்வோமாகில் புத்திரப்பேறுதவறாமல்கிடைக்கும். இதுவே நாம் இனி நடந்துகொள்ளவேண்டிய முடிவென்று சொல்லித்தீர்மானித்துத்தன் அரசாக்ஷியை மந்திரியினிடம் ஒப்பிவித்துவிட்டு மனைவியுடன் வனத்திற்சென்று அவர்களின் நல்வினைப்பயனால் விசுவாமித்திர முனிவரது ஆசிரமத்தின் பக்கத்தில் சேர்ந்தார்கள் பற்பல வளப்பங்களால் சிறப்புற்ற ஒரு பன்னசாலையைக்கண்டார்கள் அதில்

அநேகமுனிவர்கள் புடைசூழ்ந்து வணங்கும்படியாய்ப் பிரம தேவனைப்போல் புலித்தோல் ஆசனத்தில் வீற்றிருந்து வேதாகமப் பொருள்களை விரித்துரைத்துக்கொண்டிருக்கின்ற விசுவாமித்திர முனிவரை அவ்வீமராசனும் அவன்மனைவியும் கண்டு சாஷ்டாங்கமாய் வணங்கினார்கள்.

அவர்களை அம்முனிவர் தழுவி உங்களுக்குப் புத்திரன் உண்டாகக் கடவதென்று ஆசீர்வதித்தனர். அவ்விருவரும் எழுந்து கைகூப்பிநின்றார்கள். பின்பு அவ்விசுவாமித்திரமுனிவர் வீமராசனைப் பார்த்து நீ யார் நம் பன்னசாலையை நோக்கி வந்தது யாது காரணம் சொல்லுக என்று கேட்டனர். வீமராசன் செவிக்கமுதாய்க்கேட்டுக் களிப்படைந்து சுவாமி யான் கவுண்டின்னியதேசத்துக்காசன் என் பெயர் வீமன். இவள் என் மனைவி சாருகாசினி. யாங்கள் இருவரும் அளவற்ற தருமங்களைச் செய்தும் ஒரு புத்திரப்பேறில்லாமையால் மனமெலிந்து நகரத்தைவிட்டு இவ்வனத்திற்குவந்தோம். எமது பூர்வபுண்ணியத்தினால் தேவரீரைத் தெரிசிக்கப்பெற்றோம். ஓ! கிருபாமூர்த்தியே உம்மைக் கண்டபோதே புத்திரப்பேறுண்டாகும் என்று துணிவுற்றோம்.

உம்மைத் தரிசித்தவுடன் தேவரீர் செய்தருளிய ஆசீர்வாதத்தால் இத்தினமே புத்திரப்பேற்றையடைந்தவராயினோம். உமது ஆசீர்வாதம் வீணிற்போகுமா என்று சொல்லி வீமராசன் பிரார்த்தித்து நின்றனன் அதுகேட்ட விசுவாமித்திரமுனிவர் ஓ! அரசனே உனதுவம்சத்திலிருந்த முன்னோர்கள் நித்தமும் விநாயக பூசைசெய்து புத்திரப்பேறுமுதலிய மிகுந்தநன்மைகளையெல்லாம் பெற்று வாழ்ந்திருந்தார்கள் நீங்களிருவரும் அவ்வண்ணமே விநாயகமூர்த்தியைப் பூசனைசெய்துவருவீர்களாயில் உங்களுக்குப் புத்திரசம்பத்துண்டாகுமென்றார்.

அதுகேட்ட வீமராசன் அம்முனிவரை மிகுந்தபத்தியோடு வணங்கித் தேவரீர் அருளியபடியே விநாயகமூர்த்தியைப் பூசிக்கிறேன், எத்தலத்தில் விநாயகமூர்த்தியைப்பூசித்தால் உள்ளங்கைநெல்லிக்கனிபோல் விரைவில்பயனடையலாமோ அத்தலத்தையும் அவ்விநாயகமூர்த்தியையும் சொல்லியருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அம்முனிவர், அரசனைநோக்கிச்சொல்லுகின்றார்.

இப்பூவுலகத்தில் பாண்டியதேசத்தில் மகோததியாகிய கீழ் கடற்கரையில் சேதுவுக்கு இரண்டியோசனைவடக்கில் (சமிவனம்) வன்னிவனம் ஒன்றுஇருக்கின்றது அதுமகாபுண்ணியதலம் அத் தலத்தில் முன்பு சூரியதேவன் பூசித்துப் பலவரங்களைப்பெற்று அவன் வேண்டுகோளின்படி அவன்துகிரணங்கள் திருமேனியில் தழுவப்பெற்றும் பின்பு தசாதபுத்திராகிய இராமபிரான் இரா வணசம்மாரத்தின்பொருட்டு இலங்கைக்குச்செல்லக் கடலில் அணை கட்டத்தொடங்கி முதலில் பூசிக்கப்பெற்றும் உள்ள ஒருவிநாயக மூர்த்தி இருக்கின்றனர். அத்தலத்தின்பெயர் (லவணபுரம்) உப் பூர் என்றதாம் அவ்விநாயகமூர்த்தியின் நாமம் யாதெனில் (ஆதபேச்சாவிநாயகர்) வெயிலுகந்தவிநாயகர் ஆம் அத்தலத்தை நீங்கள் அடைந்து அவ்விநாயகமூர்த்தியைப் பூசித்து உபாசித்தால் விரைவில் சற்புத்திரசம்பத்தை அடைவீர்கள் என்றனர்.

அதுகேட்ட வீமராசன் உடன் தன்மனைவி சாருகாசினியோடு அம்முனிவரிடத்து விடைபெற்றுக்கொண்டு அவ்வனத்தினின்று புறப்பட்டுத் தென்திசை நோக்கிச்சென்று அம்முனிவர்சொல்லிய அடையாளப்படிக்குள்ள வன்னிவனக்ஷேத்திரத்தை அடைதலும் தம் மனம் பரிசுத்தமாய் மிகுந்த ஆனந்தபரிதமாயிருக்கப்பெற்று அவ்வனத்தினுள் நுழைய ஒரு திவ்விய அலங்காரமுள்ள ஆலயத் தைக்கண்டனர்.

அந்த ஆலயத்துள் சூரிய கிரணங்கள் தமது திருமேனியில் தீண்டிக்கொண்டிருக்கும்படி யானைமுகமும் நீண்டதுதிக்கையும் நான்கு கரங்களும் முக்கண்களும் பொலியக் கோடி சூரியப்பிர காசமாய் எழுந்தருளி வீற்றிருக்கின்ற விநாயகமூர்த்தியைத் தெரி சித்தார்கள் உடன் பேரானந்தங்கொண்டு அந்த வெயிலுகந்த விநா யகமூர்த்தியைப் பூசிக்கும் பொருட்டு அவ்வீமராசன் பத்தினியா கிய சாருகாசினியுடன் அவர் சந்நிதியிலுள்ள மகோததி தீர்த்தத் தில் சங்கற்ப பூர்வமாய் நீராடிப் பின்பு அவ்வாலயத்தின் மேல் பாலுள்ள சூரிய தீர்த்தத்திலும் நீராடிப் பட்டாடைதரித்து விபூதி ருத்திராட்சம் பூண்டு அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தீர்த் தம் புஷ்பம் சந்தனம் பால் பழவர்க்கங்கள் நைவேதனங்கள் முத

விய பூசாபதார்த்தங்களெல்லாங் கைக்கொண்டு ஆலயத்துள் சென்று விநாயகமூர்த்தியை அபிஷேகிக்க நீர் நிறைந்த தபனகும்பம் வைத்துப்பூசித்து வேத மந்திரங்களைச்செபித்து முதலில் தைலாபிஷேகஞ்செய்து நீராட்டிப் பால், தயிர், தேன், பஞ்சாமிருத முதலிய அபிஷேகங்கள்செய்து பின்பு பரிமள மிகுந்த சந்தநாபிஷேகஞ்செய்து தபனகும்பதீர்த்தத்தால் அபிஷேகஞ்செய்து ஒற்றாடையால் ஒற்றிப் பீதாம்பரஞ்சாத்தி விபூதி சந்தனமிட்டு இரத்தினுபரணங்களால் அலங்கரித்து வன்னி அறுகு மந்தாரமலர் வெள்ளருக்கமலர் கொன்றைமலர் தும்பைமலர் வில்வம் முதலியவற்றால் அலங்கரித்து ஆயிரந்தாமரைமலர்களால் ஆயிரநாமங்களை உச்சரித்து அருச்சனைசெய்து தூப தீபங்கொடுத்து அறுசுவைப் போனகம் மோதகம் அப்பம் எள்ளுருண்டை முதலிய பண்ணியங்களையும் முக்கனிகளையும் விளா, நாவல், பழங்களையும் நிவேதித்துப் பதினாறு உபசாரங்களுஞ்செய்து தேங்காயுடைத்து நிவேதித்துத் தாம்பூலஞ் சமர்ப்பித்துக் கற்பூர நீராஞ்சனம் செய்து திரியாங்க பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ்காரங்கள்செய்து வலம்வந்து மீட்டும் நமஸ்கரித்துச் சன்னிதியில்நின்று வெயிலுகந்த விநாயக மூர்த்தியைத் துதித்து முன்பு விசுவாமித்திர முனிவரால் தனக்கு உபதேசிக்கப்பெற்ற விநாயக மூலமந்திரமாகிய ஏகாக்ஷர மந்திரத்தைச் செபித்துத் தியானித்துக்கொண்டிருக்கும் பொழுது விநாயகமூர்த்தி கிருபைகூர்ந்து பிரத்தியட்சமாகி வீமராசனை நோக்கித் திருவாய் மலர்வதாயினர்.

ஓ அரசனே நீசெய்த பூசனைக்கு யாம் மகிழ்ந்தோம் உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்றருளலும் வீமராசன் சுவாமியைச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துக் கர்த்தனே உமது திருவடிகளில் இடைவிடாத பத்தியையும் ஒரு சிறந்தபுத்திரனையும் முடிவில் முத்தியையும் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொள்ள வெயிலுகந்த விநாயகமூர்த்தியானவர் வீமராசனைப்பார்த்து அன்பனே நீவேண்டியபடியே அம்மூன்றுவரங்களில் உனக்கு நம்மிடத்தில் இடைவிடாத அன்பையும் சொர்ணரூபம் பெற்ற ஒரு புத்திரனையும் தந்தோம். இனி அந்தியகாலில் முத்தியையும் கொடுப்போம்

என்று திருவாய்மலர்ந்து நீயும் மனைவியும் உமது நகரத்திற்குச் செல்லக்கடவீர் என்று விடைகொடுத்தருளினர்.

பின்பு வீமராசன் மனைவியுடன் விநாயகமூர்த்தியை மீட்டும் பூசித்து நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு அங்குநின்றும் புறப்பட்டுத் தன் விதர்ப்பநாட்டின் கௌண்டின்னிய நகரத்தை அடைதலும், மந்திரி முதலிய பரிவாரங்கள் எதிர்கொள்ள அரண்மனையை அடைந்து வாழ்ந்திருக்குங் காலத்து அவன் மனைவியாகிய சாருகாசினி வயிற்றில் கருப்பமுண்டாகிச் சொர்ணமலைபோன்ற உருவத்தோடு சகலரும் அற்புதம் கொள்ளத்தக்க ஓர் புத்திரன் உற்பவித்தான். அதனால் வீமராசன் அகமகிழ்ச்சிகொண்டு புத்திரனுண்டானதற்கு நடத்தவேண்டிய சடங்குகளைக்கிரமப்படி நடப்பித்து அப்புத்திரன் உருக்குமம் (பொன்) போன்ற ஒளியுள்ள சரீரத்தினன் ஆதலால் உருக்குமாங்கன் என்னும் நாமகரணஞ் செய்து அப்புத்திரனையும் சாருகாசினியையும் அழைத்துக் கொண்டு பரிவாரசனங்களுடன் தன் நகரத்தினின்றும் புறப்பட்டுத் தென்றிசை நோக்கிச்சென்று மீட்டும் (லவணபுரம்) உப்பூர் என்ற க்ஷேத்திரத்தையடைந்து கிருபா மூர்த்தியாகிய வெயிலுகந்த விநாயகக்கடவுளைத் தரிசித்துப் பூசித்து வணங்கித் தனது புத்திரனாகிய உருக்குமாங்கனெனும் குழந்தையை விநாயகக்கடவுளின் திருவடிகளில் நமஸ்கரிக்கச்செய்து எனது குலமுழுதும் அடிமை கொண்டருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்தனன்.

வெயிலுகந்த விநாயகக்கடவுள் அவ்வண்ணமேயாகுக என்று திருவாய் மலர்ந்தருள வீமராசன் அவ்விநாயக மூர்த்திக்கு நவரெத்தின கவசகுண்டல ஆபரணாதிகளை அணிந்து அவ்வாலயத்தினையும் புதுக்கித் திருப்பணிச்செய்து பிரமோற்சவம் பத்துதினம் முன்தொடங்கி முதனாள் துவசாரோகணஞ்செய்து புஷ்பவிமானம், இரண்டாநாள் பூதவாகனம், மூன்றாநாள் சிங்கவாகனம், நான்காநாள் பெருச்சாளிவாகனம், ஐந்தாநாள் யானைவாகனம், ஆறாநாள் இடபவாகனம், ஏழாநாள் மயில்வாகனம், எட்டாநாள் குதிரைவாகனம், ஒன்பதாநாளாகிய சிம்மமாதம் சுக்கிலபட்ச சதுர்த்தியில் மகாரதம் இவைகளில் ஆரோகணஞ்செய்து திருவீதியி

லெழுந்தருளச்செய்வித்துப்பத்தாநாள் மகோததிதீர்த்தக்கட்டத்தில் தீர்த்தவாரி யுற்சவமும் செய்வித்து அவசாவரோகணமும் செய்வித்து ஆநந்தபரிகனுய் விடைபெற்றுக்கொண்டு சாருகாசினியுடனும் ருக்குமாங்கன் என்னும் புத்திரனுடனும் தன் நகரத்திற்குச் சென்று அரசாட்சி செய்துகொண்டு வாழ்வுற்றிருந்தனன்.

வீமராசன் புத்திரப்பேறும்பெற்ற படலம் முற்றிற்று.

## தீர்த்தவிசேடப் படலம்.

லவணபுரமென்னும் உப்பூரில் வெயிலுகந்த விநாயகமூர்த்தியின் சன்னிதியில் உள்ள மகோததியாகிய விநாயக தீர்த்தத்தில் ஒருக்கால் ஆடினவர்க்ள் சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைகிறார்கள். அதினுல் அத்தீர்த்தத்திற்குத் தருமதீர்த்தம், அருத்த தீர்த்தம், காமதீர்த்தம், மோட்சதீர்த்தம், என்று பெயராம். அத்தீர்த்தமானது குட்டநோய், தொழுநோய், கும்பநோய், கம்பநோய், முடநோய், சாப்புநோய், வெட்டைநோய், கழநோய், வெம்மைநோய், வாதநோய், முதலிய வியாதிகளையும் காமம் வெகுளி முதலிய அறுவகைக் குற்றங்கள் பஞ்சமாபாதகம் ,உபபாதகம் முதலிய பாபங்களையும் தீர்ப்பதுமன்றி எழுவகைப் பிறவிநோயையும் நீக்க வல்லது.

இன்னும் அந்த விநாயகதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அதன் கரையில் பிதிரர்களை உத்தேசித்து இரணியசிரார்த்தம, ஆமசிரார்த்தம், அன்ன சிரார்த்தங்களைச்செய்து பிண்டமும் போட்டால் அவனுக்குப் பிதிரர் சாபங்கள் நீங்கிச் சந்தான பாக்கியமுண்டாம்.

அவ்விநாயக மூர்த்தியின் ஆலயத்திற்கு அடுத்த தென்மேற்குக்கத்தில், ஆதியில் சூரியதேவனுல் ஆக்கப்பட்ட தீர்த்தம் ஒன்றுளது, அது மகா புண்ணியதீர்த்தம். அதன் பெயர் சூரிய புட்கரணியாம். அதில் ஒருக்கால் மூழ்கினவர்களுடைய பஞ்சமா

பாதகங்களையும் நீக்கத்தக்கது அதன் பெயரைச் சொன்னால் இந்திரபதவியும் அதைக்கண்டால் பிரமபதவியும் அதைத்தொட்டால் விஷ்ணுபதவியும் அதில் மூழ்கினால் சிவபதவியும் கிடைக்கும் அத்தீர்த்தத்திற்றோய்ந்து வருகிறகாற்று ஒருவன் சரீரத்தில் பட்டால் அவன் சுவர்க்க லோகத்திலுள்ள ஆகாயகங்கையில் படிந்து வருகிற காற்று தன்சரீரத்தில் படியும்படிக் கற்பகச்சோலை நீழலில் வாழ்வுறுவான் அத்தீர்த்தத்தின் ஓர்துளியை உட்கொண்டவன் தேவருலகின்கணுள்ள அமுதத்தை உண்பான்.

தீர்த்தவிசேடப் படலம்
முற்றிற்று.

## தலவிசேடப் படலம்.

எங்கும் நிறைந்து பிரணவ சொரூபியாய் விளங்குகின்ற விநாயகமூர்த்தியை ஆதியில் சூரியதேவன் பூசிக்கும் பொருட்டு எத்தலங்களினும் (லவணபுரம்) உப்பூர் என்னும் இத்தலமே உத்தமோத்தமமாகிய க்ஷேத்திரமென்று தேர்ந்து அங்கு வந்து விநாயகப் பெருமானைப் பூசித்துப் பேறுபெற்றானால் அத்தலமகிமையைச் சொல்லவும் வேண்டுமோ? அவ்வெய்யிலுகந்த விநாயக மூர்த்தியைப் பரிசுத்தமான மனத்தோடு ஒருவன் அன்புடன் தியானித்து ஒரு நாள் அந்த க்ஷேத்திரத்தில் தலவாசஞ் செய்வானாகில் தனது ஆயுள்பரியந்தம் ஸ்ரீகாசி க்ஷேத்திரத்தில் வாசஞ்செய்த பலனை அடைவான் இன்னும் அத்தலத்தில் ஒரு ஏழைக்கு ஒரு பிடி அன்னங் கொடுத்தவன் பிரயாகையில பத்துலக்ஷம் பேருக்கு அன்னதானஞ் செய்த பலனை அடைவான் இன்னும் அத்தலத்தில் ஒரு ஏழைக்கு ஒருகாசாகிலும் கொடுத்தவன் மற்றைத்தலங்களில் சோடசமகாதானங்களைப் பற்றில்லாத சந்நியாசிகள் கையில் தானஞ்செய்தபலனை அடைவான் அத்தலத்தில் ஒரு பூர்வபக்ஷ சதுர்த்தி விரதத்தை அநுட்டித்தவன் மற்றைத்தலங்களில் அனேக மகாவிரதங்களைச் செய்து பெறும் பயனை அடைவான் அந்த விநாயகமூர்த்திக்கு

பூசனைக்குரிய தூபக்கால். தீபக்கால். குடைகள். கலசங்கள். வட்டில். மணி. முதலியவைகளைச் செய்துவைப்போரும் பேரிகை முதலிய வாத்தியக் கருவிகளை யியற்றிவைப்போரும் இந்திர பதவியை அடைவார்கள். இன்னும் அவ்விநாயக மூர்த்திக்கு ஆகு. இடபம். யானை. குதிரை. மயில். தேர். முதலிய வாகனங்களைச் செய்துவைப்போர் பின் ஒருக்காலும் மாதா கருப்பத்திலுறுமல் விநாயகலோக பதவியை அடைவார்கள்.

நித்தியம். நைமித்தியம். வைசேடியம். முதலிய பூசனையையும் திருவிழாச்சிறப்பு முதலியவைகளையும் விதிப்படிச் செய்விப்போரும் திருப்பணிகள் செய்விப்போரும் அஷ்ட ஐசுவரியங்களுடன் ஏக சக்கிராதிபதியாய் உலகையாண்டு மறுமையில் முத்தியின்பத்தை யடைவார்கள்.

தலவிசேடப் படலம்
முற்றிற்று.

---

## முனிவர் பூசனைப் படலம்.

இந்தப் பிரகாரம் சூதபுராணிகர் சௌநகாதி முனிவர்களுக்கு (உப்பூர் என்னும்) லவணபுர க்ஷேத்திர வெயிலுகந்த விநாயக மூர்த்தியினது மான்மியங்கள் முழுதும் சந்தேகந்தெளியச் சொல்லியருளினர். அந்த மான்மியங்களை மிகுந்த பத்தியுடன்கேட்ட அந்த முனிவர்களெல்லோரும் ஆநந்த பரிதராய்ச் சூதமுனிவருடைய பாதங்களில்வீழ்ந்துநமஸ்கரித்துச் சுவாமிகளே அடியேங்கள் அந்த மகாஸ்தலமாகிய லவணபுரத்தை யடைந்து ஆதபேச்சா விநாயக மூர்த்தியைத் தெரிசித்துப் பூசிக்க மிக்க ஆசை கொண்டவர்களாயிருக்கின்றோம் விடை தந்தருள்கவென்று பிரார்த்தித்தனர்.

சூதமுனிவரும் அவ்வேண்டுகோளுக்கிணங்கித் தாமும் அம்முனிவர்களைக் கூட்டிக்கொண்டு நைமிசாரணியத்தை நீங்கித்தென்றிசையை நோக்கி. ட

பூதலத்தில் மகோ ம

# உப்பூர்ப் புராண வசனம்.

க்ஷேத்திரமாகிய லவணபுரம் என்னும் உப்பூரை யடைந்து ஆதபேச்சா விநாயகர் என்னும் வெயிலுகந்த விநாயக மூர்த்தியினது ஆலயத்தைத்தெரிசித்து வணங்கிப் பூசிக்கும்பொருட்டுச் சன்னிதியிலுள்ள மகோததியாகிய விநாயக தீர்த்தத்தில் விதிப்படி முதலில் மூழ்கிப் பின்பு அவ்வாலயத்துக்கு மேற்கிலுள்ள சூரிய புட்கரணியில் சங்கற்ப மூலமாய் ஸ்நானஞ்செய்து விபூதி ருத்திராக்ஷம் தரித்து அநுஷ்டானங்கள் முடித்துக் கொண்டு சவுனகாதி முனிவர்களுடன் அவ்வாலயத்தினுள் புகுந்து பூசாதிரவியங்களைக் கொண்டு வேத மந்திரங்களால் வெயிலுகந்த விநாயக மூர்த்திக்கு அபிஷேகங்கள் செய்து புஷ்பங்களாலும் ஆடையாபரணங்களாலும் அலங்கரித்து வன்னி பத்திரத்தாலும் அறுகினாலும் மந்தார மலர்களாலும் தாமரை முதலிய மலர்களாலும் சகஸ்திர நாமங்களை உச்சரித்து அர்ச்சனை செய்து தூப தீபாராதனை செய்து மோதகம் லட்டுகம் அபூபம் பாயசம் சித்திரான்னம் முதலான நைவேதனங்கள் செய்து ஷோடசோபசாரங்களுஞ் செய்து தேங்காயுடைத்து நாவல் விளாம்பழங்களையும் நிவேதித்துக் கற்பூர நீராஞ்சனஞ் செய்து பிரதக்ஷிணஞ் செய்து அஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்து அம்முனிவர்கள் தனித்தனி வெயிலுகந்த விநாயக மூர்த்தியைப் பலமுறை துதிசெய்து பேரானந்தக் கூத்தாடி மீட்டும் நமஸ்கரித்தார்கள்.

இவ்வண்ணம் பூசனை முடிந்ததும் அந்தச் சூதமுனிவர் முதலிய முனிவர்களெல்லோரும் வெயிலுகந்த விநாயக மூர்த்தியின் திருவருளுடன் விடையும் பெற்றுப் பெருமகிழ்ச்சி கொண்டு அந்தத்தலத்தினின்று புறப்பட்டு நைமிசாரணியத்தை மீட்டும் அடைந்து வாழ்ந்திருந்தனர்.

## முனிவர் பூசனைப் படலம்.
## முற்றிற்று.

உப்பூர்ப் புராண வசனம்
முற்றிற்று.